# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.
ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3]    [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 29 | அக்டோபர் 1965 | இதழ் 10 |
|---|---|---|

# முறியடிக்கப் படவேண்டிய முக்கூட்டு

## உலக அமைதிக்கு
## உலை வைக்கும் நாடுகள்

பீகிங்கைத் தலைநகராகக் கொண்ட சீனா,

ராவல்பிண்டியைத் தலைநகராகக் கொண்ட பாகிஸ்தான்,

ஜகார்த்தாவைத் தலைநகராகக் கொண்ட இந்தோனீசியா,

இந்த மூன்று நாடுகளும்தான் உலகத்தில் உள்ள வேறு எந்த நாடும் செய்யத் துணியாத செயலை—உலக அமைதிக்கே உலை வைக்கும் உன்மத்தச் செயலை, வேக வேகமாகவும் விறு விறுப்போடும் செய்தபடி இருக்கின்றன, சென்ற சில ஆண்டுகளாக.

ஏனைய நாடுகள் யாவும், உலகத்தில் அமைதி நிலவ வேண்டும்—உள்ளன்பு பெருகவேண்டும்—ஒத்துழைப்பு வளரவேண்டும்—கூட்டுறவு பெருகவேண்டும்—போரும் பூசலும் புகைச்சலும் பிணக்கும் அகலவேண்டும் என்று மனமார எண்ணி வாயாரக் கூறி வருகின்றன. ஆனால் இந்த மூன்று நாடுகளோ, பிற நாடுகளின் பகுதிகளைக் கவர்ந்துகொள்ளும் பேராசை நிறைந்தவையாய், அக்கிரமமான முறையில் ஆக்கிரமிப்பு செய்து ஆணவம் மிகுந்த முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதையே தங்கள் கடமை எனக் கருதும் வெறி உள்ளம் படைத்தவையாய், நீதி நேர்மை உண்மை அறநெறி ஆகியவற்றைப்பற்றித் துளியளவும் அக்கறை அற்றவையாய் விளங்குகின்றன.

இரண்டாம் உலகப் போரின் போதும், அதற்கு முன்னரும், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்—ஆகிய மூன்று நாடுகள், உலக அமைதிக்கு வேட்டு வைக்கும் "புண்ணிய காரியத்"தில் ஈடுபட்டிருந்தன. அதுபோலத்தான் இந்நாளில், சீனா, பாகிஸ்தான், இந்தோனீசியா ஆகிய மூன்று நாடுகளும் ஆக்ரமிப்புப் பாதையில் ஆணவ நடனம் ஆடிக்கொண்டிருக்கின்றன.

அந்தக் காலத்தில் ஆக்ரமிப்பு வெறியாட்டம் ஆடுவதில் இணையற்ற வன்மையையும் ஈடில்லா ஆர்வத்தையும் பெற்றிருந்தது ஜெர்மனி. ஜெர்மனிக்குப் பக்க மேளம் கொட்டுவதில் தன்னிகரற்ற ஆவல் கொண்டிருந்தது இத்தாலி. இந்த இரு நாடுகளும் அவ்வப்போது வகுத்துவந்த ஆக்ரமிப்புத் திட்டங்களுக்கும், தொடுத்துவந்த ஆணவப் போர்களுக்கும், ஓயாமல் ஒத்து ஊதிக்கொண்டிருந்தது ஜப்பான்.

அதுபோலத்தான் இந்தக் காலத்தில் மாபெரும் ஆக்ரமிப்பு நாடாகப் பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கிறது, மஞ்சள் ஏகாதிபத்யம் என்னும் பெயர் பெற்றுவிட்ட வஞ்சகச் சீனா. நஞ்சு மனம் கொண்ட அந்த நாட்டின் அரசாங்கத் தலைவர்கள், போடு தோப்புக் கரணம் என்று சொல்வதற்குள், "எண்ணிக் கொள் சீக்கிரம், இதோ போடுகிறேன்" என்று போட்டுக் கொண்டிருக்கிறது பாகிஸ்தான். இந்த இரு நாடுகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக் கெல்லாம் உற்ற துணையாக உடன் நின்று கொண்டிருக்கிறது, இந்தோனீசியா.

ஆம்! பெர்லின்—ரோம்—டோக்யோ அச்சு, அன்றையதினம் உலக அமைதியைக் குலைக்கும் முக்கூட்டு அணியாக விளங்கியது என்றால், பீகிங்—பிண்டி—ஜாகர்த்தா அச்சு, இன்றையதினம் உலக சமாதானத்திற்கு வேட்டு வைக்கத் துடிக்கும் வீணர்களின் கூடாரமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

ஜெர்மனி—இத்தாலி—ஜப்பான் கூட்டணிக்கு இருந்த அளவு இராணுவ பலமோ, கப்பல் சக்தியோ, வானூர்திப் படையோ, சீனா—பாகிஸ்தான்—இந்தோனீசியா கூட்டணிக்குக் கிடையாது என்பது உலகமறிந்த உண்மைதான். அந்தக் கூட்டணிக்குத் தொடக்க காலத்தில் ஏற்பட்ட அளவு வெற்றிகள் இந்தக் கூட்டணிக்கு ஏற்படமுடியாது என்பதும் உண்மைதான். அந்தக் கூட்டணிக்கு உலகப் போர் தொடங்கிய நேரத்தில் இருந்த பலம், உலகத்தின் ஏனைய நாடுகள் அத்தனைக்கும் இருந்த பலத்தை விடப் பல மடங்கு மிகுதியாக இருந்தது என்பதும், அதனால் தான் அந்த மூன்று நாடுகளும் உலகப் போர் தொடங்கியதும் பல மாதங்கள் தொடர்ச்சியாகப் பற்பல வெற்றிகளைக் குவித்துக் காட்டமுடிந்தது என்பதும், அதற்கு மாறாக இன்றைய கூட்டணிக்கு உள்ள மொத்த பலம் உலகத்தில் உள்ள பிற நாடுகளின் மொத்த பலத்தைவிடப் பல மடங்கு குறைவானது என்பதும், எனவே இந்த முக்கூட்டு அணிக்கு உலகம் அஞ்சத் தேவையில்லை என்பதும், யாராலும் மறுக்கமுடியாத உண்மைகள்தாம்.

ஆனால் ஒன்று. இந்த மூன்று நாடுகளில், பாகிஸ்தான்—இந்தோனீசியா ஆகிய இரண்டு நாடுகளும் பலம் நிறைந்த நாடுகள் அல்ல என்ற போதிலும், சீனா ஓரளவுக்கு இராணுவ பலம் மிகுந்த நாடாகத் திகழ்கிறது. அந்த நாட்டின் கையில் அணுக்குண்டுகள் இரண்டொன்று இருக்கின்றன. அந்த நாட்டின் ஆதரவு, ஏனைய இரு நாடுகளுக்கும் இருக்கிறது. இந்த நிலையில் இந்த மூன்று நாடுகளும், ஜெர்மனி—இத்தாலி—ஜப்பான் கூட்டணி உலகத்தை மிரட்டிய அளவுக்கு மிரட்ட முடியாது என்ற போதிலும், ஓரளவுக்கு உலக அமைதியைக் குலைக்கும் ஆற்றல் இந்த நாடுகளுக்கு இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஒன்று மட்டும் உறுதி. உலகம் அமைதியோடு வாழவேண்டுமானால், இந்த மூன்று நாடுகளின் ஆணவம் தூள் தூளாக்கப்படவேண்டும். இந்த அடிப்படை உண்மையை உலக நாடுகள் ஒவ்வொன்றும் தெள்ளத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். குறிப்பாகவும் சிறப்பாகவும் உலக வல்லரசுகளாகத் திகழும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் இந்த உண்மையை ஒரு நாளும் மறத்தலாகாது.

## மக்களாட்சிக் கோட்பாட்டுக்கு மாபெரும் ஆபத்து

சீனா, பாகிஸ்தான், இந்தோனீசியா ஆகிய மூன்று நாடுகளின் ஆக்கிரமிப்புப் போக்கால் உலக அமைதிக்குக் குறிப்பிடத்தக்க

அளவு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல நம்மால் கவனிக்கப்படவேண்டிய உண்மை. இந்த மூன்று நாடுகளால், மக்களாட்சிக் கோட்பாட்டின் எதிர்காலத்திற்கே—அதாவது ஜன நாயகத் தத்துவத்தின் வருங்கால வாழ்வுக்கே பேராபத்து உரு வாகியிருக்கிறது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று நாடுகளும் பாராளுமன்ற ஜனநாயக முறையில் அமைந்த ஆட்சியைக் கொண்டிருப்பவை அல்ல; சர்வாதிகார நடைமுறையைக் கொண்டிருப்பவை.

இந்த மூன்று நாடுகளில் அமைந்துள்ள சர்வாதிகார ஆட்சி முறைகள் ஒன்றிலிருந்து ஒன்று சிறிதளவு மாறுபட்ட தன்மை யை உடையவை என்பது உண்மைதான். ஆனால் மூன்று ஆட்சி முறைகளும் சர்வாதிகார ஆட்சி முறைகள்தான் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கமுடியாது.

செஞ்சீனாவில், மா—சே—துங், சூ—யென்—லாய், சூ—டே ஆகிய மூவரும் இட்டதே சட்டம், வைத்ததே ஆட்சி, ஏன் அப்படி? எதற்காக இச் சட்டம்? எதனால் இந்தப் போக்கு? என்றெல்லாம் மக்கள் மன்றம் கேள்விக் கணைகளைத் தொடுக்க முடியாது அந்நாட்டில். தப்பித் தவறி எவரேனும் ஐய வினாக்களை எழுப்பினால், எழுப்பியவரின் தலை அதன் கழுத்தை விட்டுத் துண்டிக்கப்பட்டுவிடும். இதுதான் அங்குள்ள விபரீதம் மிகுந்த விசித்திரமான ஆட்சி முறை. இத்தகைய ஒரு முறையை ஜன நாயக முறை என்று யாராவது கூறமுடியுமா?

பாகிஸ்தானில், தளபதி அயூப்கான் என்ன நினைக்கிறாரோ அதுதான் சட்டம். அவருடைய ஆணைக்கு மாறாக யாரேனும் ஏதேனும் கூறினால், போனால் போகிறது என்று அவராகப் பார்த்து விட்டுவைத்தாலொழிய, அவர்களுடைய வேலை பறி போய்விடும்—சிறை வாழ்வு அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு ஜனநாயகம் என்னும் பெயர் பொருந்துமா?

இந்தோனேசியாவில் பாராளுமன்ற ஜனநாயகக் கோட்பாடு நடைமுறையில் இல்லை என்பதுமட்டு மல்ல, நீண்ட பல ஆண்டு களுக்கு அந்தக் கோட்பாடு அந்த நாட்டுக்குப் பொருந்திவராது என்று அந்த நாட்டின் சர்வாதிகாரி சுகார்னோ, வெளிப்படை யாகவே தெரிவித்திருக்கிறார். சென்ற மாதம் வரையில் அங்கே

சுகார்னோவின் பேச்சே சட்டம்—மூச்சே மசோதா என்கிற நிலை இருந்து வந்தது. சில நாட்களுக்கு முன் அந்த நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியால் தூண்டிவிடப்பட்டு மூண்டெழுந்த புரட்சி நசுக்கப்பட்டு விட்டது அல்லவா? அப்படி அதனை நசுக்கிவிட்ட இராணுவத் தலைவர்களின் கைகளில் இப்போது அளவற்ற அதிகாரம் சிக்கிக் கொண்டிருக்கிறது என்றும், அந்த அதிகாரிகள் கீறிய கோட்டைத் தாண்டமுடியாத ஒரு சங்கடமான நிலைமை சுகார்னோவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும் அந்த நாட்டிலிருந்து வருகிற செய்திகள் தெரிவிக்கின்றன. ஆட்சிப் பீடத்தை ஆட்டிப் படைக்கும் சக்தி, இந்தச் செய்திகள் தெரிவிப்பதுபோல் இராணுவத் தலைவர்களிடம் இருந்தாலும் சரி, அல்லது சுகார்னோவிடமே முன்போல இருந்தாலும் சரி, அல்லது அவர்களிடம் ஒரு பாதி—இவரிடம் ஒரு பாதி என்பதுபோன்ற நிலையில் இருந்தாலும் சரி, ஓர் உண்மை உள்ளங் கை நெல்லிக்கனியென விளக்கமாகத் தெரிகிறது. இந்தோனீசியாவின் ஆட்சி இயந்திரம், ஜனநாயக முறையில் அமைந்தது அன்று—சர்வாதிகார முறையில் அமைந்ததுதான் என்பதுதான் அந்த உண்மை. இப்போது அந்த நாட்டைப்பற்றி ஏற்பட்டுள்ள ஐயப்பாடு; அங்கே நடைபெறுவது, இராணுவத் தலைவர்களின் சர்வாதிகார ஆட்சியா அல்லது தனியொரு மனிதரின் சர்வாதிகார ஆட்சியா என்பதுதானே தவிர, ஜனநாயக ஆட்சி முறையா அல்லது சர்வாதிகார ஆட்சிமுறையா என்பது அல்ல.

சீனா, பாகிஸ்தான், இந்தோனீசியா ஆகிய இந்த மூன்று சர்வாதிகார நாடுகளில், சீனாவும் பாகிஸ்தானும் இந்தியத் திருநாட்டின் சில பகுதிகளை அள்ளி விழுங்கி ஏப்பமிடத் துடித்துக் கொண்டிருக்கின்றன. அதுபோலவே இந்தோனீசியா, அதன் அண்மையில் உள்ள மலேசியாவின் சில பல பகுதிகளை ஆக்கிரமிப்பின் மூலம் கைப்பற்றிக் கொள்ள அளவற்ற ஆசையுடன் அலைந்து கொண்டிருக்கிறது.

ஆக்கிரமிப்பில் இறங்கியுள்ள மூன்று நாடுகளும் சர்வாதிகார நாடுகள் என்பதையும், அவற்றின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கிற இந்தியா, மலேசியா ஆகிய இரண்டும் ஜனநாயக நாடுகள் என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டால் ஓர் இன்றியமையாத உண்மை, தன்னாலே விளங்கும். ஆக்கிரமிப்பு நாடுகள் மூன்றும் வெற்றி பெறுகிற நிலை ஏற்பட்டுவிட்டால், ஆசியாக் கண்டத்தில் ஜனநாயக ஆட்சிமுறைக்கு முழு அழிவு ஏற்பட்டு விடும் என்பதே அந்த உண்மை.

ஆசியாக் கண்டத்தில் ஜனநாயகம் ஐயோ பாவம் என்கிற நிலைமைக்கு ஆளாகிவிடுமானால், ஐரோப்பாவிலும் அந்த நிலைமை உருவாக அதிக நாட்கள் ஆகாது. இந்த இரு கண்டங்களிலும் இத்தகைய ஓர் இருண்ட நிலை உருவாகுமானால், சில பல ஆண்டு களில் அமெரிக்கக் கண்டமும் ஜனநாயகத்தைத் துறந்த பகுதியாக உருமாறிவிடும். அத்தகைய நிலை ஏற்பட்ட பிறகு, உலகம் முழுவ திலுமே ஜனநாயகம் மறக்கப்பட்ட ஒரு பொருளாக மாறிவிடும் என்பதில் ஏது ஐயம்?

**உதைத்த காலை முத்தமிடும்**

**வல்லரசுகளின் விபரீதம்!**

தலை சிறந்த கோட்பாடாகிய ஜனநாயக ஆட்சிமுறை தொடர்ந்து இருக்கவேண்டியது இன்றியமையாதது என்று எந்தெந்த நாடுகள் கருதுகின்றனவோ அந்த நாடுகளெல்லாம், இந்தியா, மலேசியா ஆகிய இரண்டு நாடுகளின் பக்கம் தங்கள் அன்பையும் ஆதரவையும் குவித்தாகவேண்டும். அதுமட்டுமல்ல, சீனா—பாகிஸ்தான்—இந் தோனீசியா ஆகிய ஆக்கிரமிப்பு நாடுகளின் ஆணவத் திட்டங்களைப் பொடிப் பொடியாக்குவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டாக வேண்டும். இப்படிச் செய்வதை அந்த நாடுகள் ஏதோ இந்தியா மீதும் மலேசியா மீதும் காட்டுகிற தயவு அல்லது தாட்சண்ணியம் அல்லது வள்ளல் தன்மை என்று தவறாக எண்ணிவிடக்கூடாது. உலக அமைதி, ஜன நாயகக் கோட்பாடு—இந்த இரண்டும் உலகத்தில் தொடர்ந்து இருப்பதற்காக அந்த நாடுகள் செய்து தீரவேண்டிய கடமைகள் அவை.

உலகத்திலேயே இன்றையதினம் உள்ள மிகப் பெரிய ஜன நாயக நாடு இந்தியாதான். இவ்வளவு பெரிய ஜனநாயக நாடு வீழ்ச்சியுறுமானால்—ஒருக்காலும் வீழ்ச்சியுறாது என்பது உறுதி. வீழ்ச்சியுறா வண்ணம் அதனைக் காப்பாற்றும் வீரமும் தீரமும் அஞ்சாத நெஞ்சமும் அசையாத உறுதியும் இந்திய மக்களுக்கு உண்டு—வாதத்திற்காக, வீழ்ச்சி யுறுவதாகக் கற்பனை செய்து கொண்டு பார்த்தால்—அதன் பின், ஜனநாயக முறை எப்படி உலகத்தில் வாழ முடியும்?

அமெரிக்கா,

பிரிட்டன்,

ஆகிய இரண்டு நாடுகளின் தலைவர்களும் இந்தக் கேள்வியைத் தங்கள் உள்ளங்களில் அழியாத முறையில் பொறித்து வைத்துக் கொள்ளவேண்டும். அப்படிப் பொறித்துக் கொள்வார்களானால்

அண்மையில் பாகிஸ்தானின் ஊடுருவிகளும் படைவரிசைகளும இந்திய மண்ணை ஆக்கிரமித்தபோது பாகிஸ்தான் அரசாங்கத்தை மறைமுகமாக ஆதரிப்பது போன்ற போக்கை அவர்கள் கொண்டிருந்தார்களே, அத்தகைய போக்கை இனி ஒரு நாளும் கொள்ளமாட்டார்கள்.

அப்பட்டமான ஆக்கிரமிப்பில் இறங்கியதன் மூலமாக உலக அமைதிக்கு வேட்டு வைக்கும் நாடு பாகிஸ்தான். அதுமட்டுமல்ல. மாபெரும் ஆக்கிரமிப்பு நாடாக விளங்கும் சீனாவோடு பட்டப் பகலில் வெட்ட வெளிச்சமான முறையில் காதல் நாடகம் ஆடிவரும் நாடு பாகிஸ்தான். அதுமட்டுமல்ல? ஜன நாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் செயலில் மும்முரமாக ஈடுபட்டுள்ள நாடு பாகிஸ்தான். அவ்வளவுதானா? தலை சிறந்த ஜனநாயக நாடாகிய இந்தியாவின்மீது ஆக்ரமிப்புச் செய்ததோடு நில்லாமல் மற்றொரு சிறந்த ஜன நாயக நாடாகிய மலேசியாவிடம் தன் இராஜ தந்திர உறவுகள் யாவற்றையும் முறித்துக் கொண்டுவிட்ட நாடு பாகிஸ்தான்.

இப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் பிரிட்டனும் அமெரிக்காவும் நேசமும் பாசமும் காட்டி, அதன் ஆக்கிரமிப்புச் செயல்களை வெளிப்படையான முறையில் கண்டிக்கக்கூடத் தைரியம் அற்ற போக்கில் இருக்குமானால், அத்தகைய போக்கை, மன்னிக்க முடியாத குற்றம் என்று கூறுவதா? உதைத்த காலை முத்தமிடும் உதவாக்கரைப் போக்கு என்று இயம்புவதா? ஜனநாயகத்தின் எதிர்காலத்திற்குத் துரோக மிழைக்கும் தீச் செயல் என்று விளம்புவதா?

பிரிட்டன், அமெரிக்கா ஆகிய இரண்டு வல்லரசுகளும், உலகத்தின் பிற நாடுகளும், அமைதியை நிலை நாட்டுவதிலோ அல்லது ஜனநாயகத்தின் எதிர்காலத்தை ஒளி மிகுந்ததாக ஆக்குவதிலோ உண்மையான அக்கறை கொண்டிருந்தால், அவை அத்தனையும் உடனடியாகச் செய்யவேண்டிய பணிகள், பீகிங்—பிண்டி—ஜகார்த்தா அச்சை, முறியடிக்கப்படவேண்டிய முக்கூட்டு என்று வெளிப்படையாக அறிவிப்பதும், இந்த அறிவிப்பை நடைமுறைச் செயலாக்குவதும்தான்.

செய்யுமா அவை அப்படி?

கேட்கிறது உலகம்! உலகம் மட்டும்தானா கேட்கிறது? இல்லை இல்லை! ஜனநாயகத்தின் எதிர்காலமும் கேட்கிறது!

# கல்வியில் பொறுப்பு

காலேஜுகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் உள்ள பொறுப்பை சர்வகலாசாலை மான்யக் கமிஷன் தலைவர் திரு. டி.எஸ். கோத்தாரி குறிப்பாக எடுத்துக் காட்டியிருப்பதை வரவேற்கிறோம். மாணவர் கவுன்சில் கூட்டத்தில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் பொதுவாக காலேஜ் படிப்பு வகைகள் அனைத்துக்குமே பொருந்தும். ஆனால், கணிதம், விஞ்ஞானம், எஞ்சினீயரிங், வைத்தியம் உட்பட தொழில் முறைக்கல்வி விஷயத்திலாவது அவரது யோசனைகளுக்கு விசேஷ மதிப்புக் கொடுப்பது அவசியம்.

மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி, நம் நாட்டில் போதிய அளவு கஷ்டப்பட்டு உழைப்பதில்லை என்று திரு. கோத்தாரி கூறுகிறார். ரஷியாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் நிலவரத்தை எடுத்துக் காட்டி, இங்கேயும் கடுமையாக உழைத்தாக வேண்டும் என்று அவர் கொடுத்துள்ள யோசனையை வரவேற்கிறோம்.

ரஷியாவும் அமெரிக்காவுந்தான் இன்று விஞ்ஞான, தொழில் துறைகளில் முன்னணியில் இருப்பவை. அந்த நிலைக்கு அவை உயர்ந்ததற்கு முக்கிய காரணம் கல்வியைப் பயனுள்ளதாக்குவதற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் கடுமையாக உழைத்து வருவதுதான். அங்கெல்லாம் மாணவர்கள் வாரா வாரம் சராசரி ஐம்பது மணி நேரம் வரை கடுமையாக உழைக்கிறார்கள். அவர்களுடைய படிப்பையும் உழைப்பையும் ஒழுங்காக, இடையறாது, சரி பார்த்து, அதிகப்பட்சப் பயன் கிடைக்கும்படி பார்த்துக் கொள்வது தமது பொறுப்பு என்று கருதி ஆசிரியர்கள் அங்கு உழைக்கிறார்கள். அதே மாதிரி நிலவரம் நம் நாட்டிலும் இருக்கச் செய்யும் கடமை கல்விப் பொறுப்பாளருக்கு உண்டு.

மாணவர்கள் சம்பந்தப்பட்டவரை படிப்புக் காலத்தில் படிப்புத்திறனை முழு அளவில் பெறுவதுதான் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும். விளையாட்டும் பிறருடன் சேர்ந்து பழகுவதும் மிதமான பொழுது போக்கும் அவசியமே. ஆனால் படிப்பில் தகுதி பெறுவதற்கு இவை இடையூறாக இருக்கலாகாது. ஒழுங்காக வகை செய்துகொண்டு மனதைச் சிதற விடாமல் முனைந்து படிக்க வேண்டும். பாடபுத்தகங்களை மட்டுமின்றி துணை நூல்களையும் படிக்க வேண்டும். கசடறக் கற்பது கடமை. எனவே அவ்வப் பொழுது ஆசிரியர்களை அணுகிக் கேட்டு சந்தேகங்களை அகற்றிக் கொண்டு

மனத்தெளிவு பெற்றாக வேண்டும். படிப்பில் அக்கறை காட்டுகின்ற மாணவனுக்கு நல்லாசிரியர்கள் எப்பொழுதுமே துணை புரியத் தயாராயிருப்பார்கள். அவர்களை மாணவர்கள் சரிவரப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

தமது மாணவர்கள் நல்ல புலமையுடன் விளங்கச் செய்வதில் ஆசிரியர்கள் பெருமை கொள்ள வேண்டும். வகுப்பு அறைகளில் குறித்த காலம் பாட விஷயங்களைப் பற்றிய உரைகளை நிகழ்த்து வதுடன் தமது பொறுப்பு தீர்ந்து விட்டதாக நினைக்கின்ற மனப்பான்மை அகல வேண்டும். மாணவன் சரிவர படித்துப் பயனடைகிறானா என்பதை அவ்வப் பொழுது சரிபார்த்து, தவறுகளைத் திருத்தி, அவன் போதிய அபிவிருத்தி யடைவதற்குத் துணை புரிகின்ற பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. "டியூடோரியல்" முறை என்பது இந்த நோக்கத்துடன் தான் ஏற்பட்டது. ஆனால், நடைமுறையில், இன்னும் பல வாய்ப்புக்களைப் போலவே, இதுவும் வேண்டா வெறுப்பாக, பெயரளவில், அடையாள பூர்வமாக நடைபெறுகின்ற சடங்காகி விட்டது. இந்த நிலைமை அடியோடு மாற வேண்டும். "டியூடோரியல்" முறையை வெற்றிகரமாக்குவதில் டியூட்டர்களுக்கு மட்டுமின்றி விரிவுரையாளர்களுக்கும் பேராசியர்களுக்கும் அடிப்படையான பொறுப்பு உண்டு.

அவ்வப்பொழுது வைக்கின்ற சோதனைத் தாள்களில் "சரி" அல்லது "தவறு" என்ற குறிகளைப் போட்டால் போதாது. தவறுகளைத் திருத்தி மாணவர்களிடம் விடைத்தாள்களைத் தர வேண்டும். அவசியமான யோசனைகளைக் குறித்துத் தர வேண்டும். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு மணி நேரத்தை ஒதுக்கி வைத்து, வகுப்பு அறைகளிலேயே, பொதுப்படையான தவறுகளை எடுத்துக் காட்டி, சரியான விடைகளையும் விளக்கிக் கூறலாம். இது நடை முறையில் விசேஷ நற்பயனை அளிக்கக் கூடும். ஆண்டு இறுதிப் பரீட்சை விடைகள் சம்பந்தப் பட்டவரை மார்க்குகள் பிரதானம்; சரியா தவறா என்று குறிப்பிடுவது போதும். ஆனால் வருஷம் நெடுக நடைபெறும் சோதனைகள் விஷயத்தில், தான் செய்த தவறுகள் யாவை என்பதைத் தெளிந்தறிந்து மாணவன் திருந்துவதற்கு வேண்டிய உதவியை அளிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. இந்தப் பணிகள் சரிவர நிறைவேறுவதற்கு ஆசிரியர்கள் அதிக நேரம் உழைக்க வேண்டியிருக்கும். இப்போதெல்லாம் காலேஜ் ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம் கிடைப்பதால் முன்போல அவ்வளவு கவலை இல்லை. [illegible]களை

யற்ற உழைப்பை அவர்கள் நல்க வேண்டும் என்றுதான் சமூகம் எதிர் பார்க்கிறது.

ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்குமிடையே நெருங்கிய தொடர்பும் பயனுள்ள நல்லுற வும் இருந்து வரச் செய்வது முதன்மையான கடமை. அந்த உறவு முறையானது சமுதாயத் தின் இணக்கமான வளர்ச்சிக் கும், நற்பண்புகளின் ஏற்றத்துக் கும் இசைவாக அமையவேண்டும். காலேஜ் படிப்புக்குப் பொதுப் படையாகவும், விஞ்ஞானத் தொழில் முறைக் கல்விகளுக்கு விசேஷமாகவும் பெருந் தொகை கள் செலவழிக்கப்படுகின்றன. பெற்றோர் மட்டுமின்றி அர சினரும் பெருமளவில் வசதி செய்து வருவதைக் காண்கிறோம். எனவே போதிய சிரத்தையுடன், உற்சாகத்துடன், கருமமே கண்ணாக, மெய்வருத்தம் பாராது உழைத்து நற்பயனைச் சாத்திய மாக்கும்பொறுப்புஆசிரியர்களுக் கும் உண்டு, மாணவர்களுக்கும் உண்டு. பொழுதுபோக்கு அவ சியமே. ஆனால், சினிமா மோகந் தான் பிரதானம், படிப்பு இரண் டாந்தரம் என்று நினைக்கின்ற போக்கு அடியோடு மாறவேண் டும். இன்பத்தை நாடுவோரை கல்வி கேள்விகள் வந்து அடைய மாட்டா என்பது முது மொழி. இது மாணவப் பருவத்துக்கு முற்றிலும் பொருந்தும். இந்தி யாவின் பண்பாட்டுக்கும் வாழ்க்கை வழிக்கும் இசை வில்லாத சினிமா உலகம் சில விடங்களில் காலேஜ்களை மித மிஞ்சிக் கவர்ந்திருப்பதை திரு. கோத்தாரி எடுத்துக் காட்டி செய்துள்ள எச்சரிக்கை மிக மிக முக்கியமானது. இவ்வழியிலும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நல்ல வழிகாட்டிகளாக இருக்க முடியும்.

நாம் வாழ்வது தொழில்திறன் சகாப்தத்தில், தொழில்திறன் வாழ்க்கை மேம்பாடு அடை வதற்கு அவசியமே. தேசப் பாது காப்பை உறுதி செய்கின்ற பணி களுடன் கணிதமும் விஞ்ஞான மும் தொழில் நுட்பத்திறனும் இணை பிரியாதவை. எனவே திறமையான தொழிற் கல்வி வகைகளில் நமது மாணவர்கள் இனி முதன்மையாக இருந்தாக வேண்டும். இன்றைய சூழ்நிலை யில் இது தேசபக்தக் கடமை என்பதை மாணவர்களும் உணர்ந்து ஆசிரியர்களும் அதற் கேற்பப் பணியாற்ற வேண்டும்.

# பசி போக்க மருந்து

ஒவ்வொரு நாளும் பசியால் வாடும் உலக மக்களின் தொகை 15 கோடி. அதேபோன்று பட்டினியால் இறப்போரின் தொகையும் பத்தாயிரம். இந்த நிலைமையில் உலகத்தின் வளங்களும் குறைந்து கொண்டே வருகின்றன. ஆனால் மக்கள் தொகை மட்டும் ராக்கெட் வேகத்தில் வளர்ந்து வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையும், அருகி வரும் மண் வளமும் எதிர் காலத்தைப் பற்றி எண்ணுவோர் நெஞ்சில் இடியெனத் தாக்குகிறது. 20-ஆம் நூற்றாண்டு முடிந்து 21-ஆம் நூற்றாண்டு தொடங்கும் போது மக்கள் தொகை இப்பொழுது இருப்பதைப்போல் இருமடங்காகி விடும்! அப்பொழுது அவர்களுக்கு உணவு கொடுப்பது எப்படி?

எவ்வளவுதான் வளங்கொழிக்கும் நாடாக இருந்தாலும் 20-ஆம் நூற்றாண்டின் முடிவில் தன் நாட்டில் உள்ள மக்களுக்கு போதிய உணவை அந்த நாட்டு அரசாங்கத்தால் வழங்க முடியாது-மண் வளத்தை மட்டும் அந்த அரசாங்கம் நம்பிக்கொண்டிருக்குமானால் என்கிறார் டாக்டர் வினிட்ஸ். பிறகு வழிதான் என்ன? உணவுப் பொருள்களை வயல்களிலிருந்து உற்பத்தி செய்வதை விட்டு விட்டு தொழிற்சாலையிலிருந்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கவேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு நாடும் தன் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

உணவுப் பொருள்களைத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதா? அது எப்படி?

ஒரு மனிதனுக்குத் தேவையான சத்துள்ள இரசாயனக் கலவைகளைச் சேர்த்து இரசாயன உணவைத் தயாரித்து மக்களுக்கு வழங்க வேண்டும். அப்படிப்பட்ட உணவை உட்கொண்டு மனிதனால் வாழமுடியும் என்பதை அமெரிக்க விஞ்ஞானிகள் இருவர் கண்டு பிடித்துள்ளனர்.

விண்வெளிக்குச் செல்பவர்கள் குறைந்த எடையுள்ள உணவுப் பொருள்களைத்தான் கொண்டு செல்ல முடியும். அதற்காகக் குறைந்த எடையுள்ள உணவுகளைத் தயாரிக்க அமெரிக்க அரசாங்கம் டாக்டர் வாலேஸ்ச்சான் என்ற விஞ்ஞானியை ஆராய்ச்சியாளராக நியமித்தது. ஆனால் அதற்கு முன்னமே டாக்டர் வினிட்ஸ் இந்த ஆராய்ச்சியில் கடந்த பத்தாண்டு காலமாக ஈடுபட்டு வருகிறார். தன்னுடைய 39 ஆண்டு கால வாழ்வில் 10 ஆண்டுகளை இரசாயன உணவு

தயாரிப்பது எப்படி என்பதற்காக மட்டும் செலவழித்துள்ளார். கடைசியில் வெற்றியும் கண்டார்.

1957-ஆம் ஆண்டு டாக்டர் வினிட்ஸ்ம் டாக்டர் செஸ்ஸி கிரீன்ஸ்டன் என்ற இருவரும் இரசாயன உணவுப் பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியை மெரிலேண்டில் உள்ள அமெரிக்க தேசிய இரசாயன ஆராய்ச்சிக் கூடத்தில் நடத்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த ஆராய்ச்சிக்கூடத்தைப் பார்வையிடவந்த இரஷ்ய விஞ்ஞானிகள் இருவர் நாங்களும் இந்த ஆராய்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம். விண்வெளி செல்பவர்களுக்குப் பயன் படுவதற்காக என்று கூறினர். இந்த நிகழ்ச்சி நடந்த சில மாதங்களில் அமெரிக்கா தனது முதல் விண்வெளிக் கப்பலை ஏவுவதற்காக முடிவு செய்தது. உடனே இந்த இரு விஞ்ஞானிகளும் தாங்கள் தயாரித்துள்ள உணவை விண் வீரர்கள் பயன்படுத்திப் பார்க்குமாறு கேட்டுக் கொண்டனர்.

தங்கள் வேண்டுகோள் உடனே ஏற்றுக் கொள்ளப்படுமென இந்த விஞ்ஞானிகள் நினைத்தனர். இரசாயன உணவைத் தேவைப்படும் அளவுக்கு வழங்கவும் அவர்கள் தயாராக இருந்தனர். ஆனல் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. விஞ்ஞானிகளின் மாநாடுகள் நடத்தி அதிலே இந்த உணவு பற்றிவிவாதித்து அவர்களுக்கு ஒரு முடிவுக்குவர 5 ஆண்டுகள் ஆயின இதனை உட்கொண்டால், மனிதன் உடலில் ஏதாவது மாறுதல் ஏற்படுமா என்று ஆராயும்படி டாக்டர் வினிட்ஸ் கேட்டுக் கொள்ளப்பட்டார். டாக்டரின் ஆராய்ச்சி 1963-ஆம் ஆண்டு தொடங்கியது.

சிறைக் கைதிகள் 15 பேர்களைக் கொண்டு இந்த ஆராய்ச்சியைத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 180 கைதிகள் தாமாகவே இந்தச் சோதனையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்தனர். அவர்களில் 24 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்ட 24 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அந்தச் சிறைக் கைதிகளுக்குக் கண்டிப்பான சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டனர். இந்த ஆராய்ச்சி நடக்கும் நாட்களில் கைதிகள் டாக்டர் வினிட்ஸ் வழங்கும் இரசாயன உணவைத் தவிர வேறு எதையுமே உட்கொள்ளக் கூடாது. அடுத்து இவர்களைப் பார்வையிட மாதத்திற்கு ஒரே ஒருவர் மட்டும் அனுமதிக்கப்படுவர் என்பது தான் அந்தக் கட்டுப்பாடுகள்.

இந்த உணவு வழங்க ஆரம்பித்த சில தினங்களில் எல்லோரும் எப்பொழுது பார்த்தாலும் தூக்க உணர்வோடே இருந்தனர். தலைவலியாலும் அவதிப்பட்டனர். சிலரின் பற்கள் ஆட்டங் கண்டன. சிரின் தலைமுடி உதிர ஆரம்பித்தது. ஆனல்

இந்தக் குறைகள் தானாகவே சில நாட்களில் நிவர்த்தியாகி விட்டன. இவர்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது வேலை எதுவும் செய்ய அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு 15 நிமிட நேரம் சைக்கிள் விட மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

1963ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதியோடு 122 நாட்களின் சோதனை முடிந்திருந்தது. சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 15 பேரும் உற்சாகமாகக் காட்சி யளித்தனர். நல்ல ஆரோக்கியத்துடனேயே உலவுகின்றனர். கிருஸ்துமஸ் அன்று கூட அவர்கள் ரொட்டியைத் தொடவில்லை. எல்லாம் மாத்திரை உணவுதான்!

இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்களில் சிலர் கொலைகாரர்கள். சிலர் கொள்ளைக் காரர்கள், சிலர் கற்பழிந்தவர்கள், சிலர் தீயிட்டவர்கள். ஆனால் இவர்கள் அனைவருமே இன்று ஒரு துறையில் மனித சமுதாயத்தின் முன்னேடியாகி விட்டனர். எந்த மனித உயிரும் இத்தனை மாதங்கள் இப்படித் துளியும் உணவே அருந்தாமல் உயிர் வாழ்ந்ததில்லை சமுதாயத்தால் ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய இவர்கள் இன்று சமுதாயத்தின் முன்னேடிகள் என்ற பாராட்டுக்குச் சொந்தக் காரர்களாகி விட்டனர். இவர்கள் இந்த நான்கு மாதங்களாக உட்கொண்ட உணவு வெறும் மாத்திரைகளும் சுகாதாரம் நிறைந்த தண்ணீரும்தான்.

சோதனை முடிந்தது. அதுவும் வெற்றிகரமாக முடிந்தது. இந்த மாத்திரை பசி தீர்க்கும் மாமருந்தாக மட்டுமில்லையாம். சில நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாகவும் இருக்கிறதாம். இருதயநோய், இரத்த சம்பந்தப்பட்ட சில நோய்களுக்கும் இந்த உணவு பயன்படுகிறதாம். இந்த உணவின் விலை மதிப்பு தங்கத்தின் விலை மதிப்பை எட்டுவதுதான் இதிலே உள்ள ஒரே ஒரு குறை. மலிவாகக் கிடைக்கும்படி இந்த உணவை எப்படித் தயாரிப்பது என்பதே இன்றைய ஆராய்ச்சி. நிச்சயம் இதிலும் வெற்றி காண முடியும் என்று நம்புகின்றனர். வெற்றி கிடைத்தால், வயல்களை எதிர்பார்த்துக் கிடக்கும் நிலை மாறிப் பிறகு இரசாயனக் குழாய்களை எதிர்பார்க்கும் நிலை உருவாகும்! உலகத்தின் எந்தக் கோடியிலும் பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் இடம் இருக்காது!

—"முத்தாரம்"

# மனிதனும் மிருகமும்

[திரு. தயானந்த ராவ், வனவளப்பயனீட்டு அலுவலர் (Forest Utilisation Officer), சென்னை. ஆண்டுதோறும், அக்டோபர் மாதத்தில், வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுகிறது, அதன் நோக்கம், அவசியத்தை விளக்குகிறது, இக்கட்டுரை.]

பல்வண்ண இசைபாடும் புள்ளினமாயினும், கானகம் வாழ் கொடிய விலங்குகளாயினும், பொதுவாகப் பிராணிகள் பால் அன்பு செலுத்தும் பண்பு, நம் மக்களிடையே பண்டைக் காலத்தில் மிகுந்திருந்தது. கொல்லாமையை ஒரு வாழ்வு நெறியாகக் கொண்டு ஒழுகினர். நம் சமயக் கருத்துக்களும், இவ்வழியில் துணை நின்றன. எனவே, இயற்கை அன்னை அளித்த அரவணைப்பில் பிராணிகள் யாவும், தம் இச்சையாய் வாழ்ந்து வந்தன.

காலம் மாறிற்று. மக்கள் மனப்பான்மையும் மெல்ல மெல்ல மாறிற்று. மிருகங்களை வேட்டையாடுவது — துரத்தியடித்துக் கொல்லுவது — ஒரு சிலருக்குப் பொழுதுபோக்காக ஆகியது. குறிப்பாக, இந்தியாவில் ஆட்சி செலுத்த வந்த வெள்ளையர்கள், நம் நாட்டில் செழித்து அடர்ந்த காடுகளையும், அங்கு திரிந்து உலாவும் மிருகங்களையும், கண்டபோது, அவர்களது வேட்டையாடும் இச்சை இறக்கை கட்டிப் பறந்தது. மனம் கொண்ட மட்டும் வேட்டையாடினர். அதிலும் எவ்வாறு? முன் காலத்தில் போல், நடுக்காட்டிற்குள் துணிவோடு நடந்து சென்று, திடீரென எதிர்ப்படும் கொடிய விலங்குகளிடம் நேருக்கு நேர் நின்று ஈடு கொடுக்கும் அத்தன்மையதா? அல்ல, மோட்டார் வாகனங்களில் பத்திரமாக அமர்ந்து, சக்தி மிகுந்த விளக்குகள் மூலம் ஒளியைப் பாய்ச்சி, மிருகங்கள் கண் கூசி, திசை தெரியாமல் திண்டாடி அயர்ந்து நிற்கும்போது, துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவது தான், இவர்கள் வேட்டை முறை! இந்த அட்டகாசத்தால், கோர விளையாட்டால், இந்தியாவுக்கே சிறப்பான சில விலங்கு, பறவை இனங்கள் பூண்டற்றுப் போயின.

## யார் காரணம்?

விலங்கினங்கள் அழிந்துபடும் அவலநிலை, இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஆரம்பமாயிற்று. அதிகாரிகளாகவும், ஊழியர்களாகவும், தேயிலைத் தோட்ட முதலாளிகளாகவும் இங்கு வந்த பிரிட்டிஷ்காரர்கள் தான் இதற்கு முக்கிய காரணம் ஆவர். இவ்வகையில் சில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். கத்தியவாரில் குதிரைப்படை அதிகாரி ஒருவர் 80 சிங்கங்களைச் சுட்டுத் தள்ளி

ஞர். உத்திரப் பிரதேசத்தில் உள்ள 'கிர்' காடுகளில், பத்தே நாட்களில் 14 சிங்கங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மத்தியப் பிரதேசத்தில் பிரிட்டிஷ்காரர் ஒருவர், இந்தியாவில் தங்கிய 21 ஆண்டுகளில் 500 புலிகளை வேட்டையாடிச் சுட்டார். ராஜபுதனத்தில் ஒரு ரயில்வே அதிகாரி, ரயில்வே மூலம் தமக்குக் கிடைத்த வசதிகளைப் பயன்படுத்தி, 1850-க்கும், 1854-க்குமிடையே 100 புலிகளைச் சுட்டுக் கொன்ருர். பிரிட்டிஷார்தான் என்பதில்லை, சுதேச மன்னர்களும் இவ்வகையில் சளைக்கவில்லை. ஒரு மன்னர் தமது வாழ்நாளில் 616 புலிகளைச் சுட்டதாகக் கூறப்படுகிறது. இன்னெருவர் 1,100 புலிகளைச் சுட்டு ஒரு சாதனையே செய்து காட்டிவிட்டார். காஷ்மீரில் ஒரு வேட்டைக்காரர் 12 ஆண்டு காலத்தில் 58,613 காட்டுப் பறவைகளைச், சுட்டுப் பொசுக்கினுர்.

ஒரு காலத்தில், 'அகிம்சை' ஒரு வாழ்வு நெறியாக இருந்த நம் நாட்டில், எப்படிப் பின்னர் வன விலங்குகள் கொன்று குவிக்கப்பட்டன என்பதை மேற் சொன்ன தகவல்கள் நன்கு புலப்படுத்து கின்றன.

இம்முறையில், கம்பீரமான வேங்கைப் புலியும், தலையில் இளஞ்சிவப்பு நிறத்துடன்; கவர்ச்சி மிக்க தோற்றமுடைய வாத்தும் அந்த இனங்களே அழிந்து போகும் அளவுக்குச் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஆசிய சிங்கமும்; பெருமைக்குரிய இந்திய காண்டாமிருகமும் இன்றும் உயிர் வாழ்கின்றன என்ருலும், அவை முன்போல் வளர்ந்து பெருகும் இனமாக அல்லாமல், பண்டைக் காலத்தை நினைவூட்டும் அடையாளச் சின்னங்கள் போல் அங்குமிங்குமாக சிற்சிலவே காணப்படுகின்றன. அதே போல் இந்தியக் காட்டு எருமையும் கஸ்தூரி மான், கருமான், சதுப்பு மான் ஆகியவை இனியும் தப்பவேண்டுமானுல் அவற்றிற்குச் சிறப்பான பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

## தடுப்பு நடவடிக்கைகள்

ஆக, வன விலங்குகளைப் பாதுகாக்கவும், அவை விருத்தியடையவும் இப்போது என்ன செய்யப்படுகின்றன? இவ்வகையில், ஆரம்ப காலத்திலேயே நடவடிக்கை எடுத்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. 1882-ம் ஆண்டு தமிழ் நாடு வனச் சட்டத்தின்படி, மாநிலத்தில் உள்ள ரிசர்வ் காடுகளில் வேட்டையாடுதல் ஒரு கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வரப்பட்டது.

அதற்கு முன்பே கூட, கம்பீர மிக்க நமது யானைகள், எண்ணிக்கையில் வேகமாகக் குறைந்து வருவதை அறிந்து, 1878-ஆம் ஆண்டு தமிழ்நாடு காட்டு யானைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, அவற்றிற்குப் பாதுகாப்பு தரப்பட்டது. இதன் பலனுக, யானைகளின் எண்ணிக்கை மறுபடி அதிகரிக்கத் தொடங்கின.

வேட்டை மூலம் விலங்கினம் அழிந்து படுவதைத் தடுக்க, பரிசளிப்பு முறையொன்றும் 1937-லேயே ஏற்படுத்தப்பட்டது. கொல்லப்படும் செந்நாய் ஒவ்வொன்றுக்கும் கணிசமான சன்மானம் வழங்கப்படுகிறது. அதோடு, இன்னொரு நடவடிக்கையும் உண்டு. அதாவது காடுகளில் வேட்டை யாடுவதற்குரிய காலமும் வரையறுக்கப்படுகிறது. ஆண்-பெண் சேர்க்கை காலத்தில் விலங்குகளுக்கும் குட்டிகளுக்கும் பாதுகாப்பாக, அந்தக் காலத்தில் வேட்டையாட அனுமதிப்பதில்லை. வேட்டை அனுமதிக்கப்படும் காலத்திலும், ரிசர்வ் காடுகளில் துப்பாக்கியால் சுட்டு வேட்டையாட, பெரும் கட்டணம் செலுத்தி லைசென்ஸ் பெற்றாக வேண்டும். அப்படி லைசென்ஸ் பெறுபவரும் காடு முழுவதும் வேட்டையாட முடியாது. ஒரு குறிப்பிட்ட பிரதேசம் மட்டும் அவருக்கு ஒதுக்கப்படும். ஆகையால் அவருடைய வேட்டை 'மாசூல்' ஒரு அளவுக்கு உட்பட்டதாகத்தான் இருக்கும். இரவில் அதிக வெளிச்சமுள்ள விளக்குகளை உபயோகித்து, விலங்குகளைச் சுடுவது தடை செய்யப்படுகிறது. இத்தனை கட்டுப் பாடுகள் இருந்தும்கூட, விலங்குகளைச் சாகடிப்பது பெரும் அளவில் நடக்கத்தான் செய்கிறது—எந்தச் சட்டந்தான் மீறப்படாமல் இருக்கிறது?

அண்மையில், கம்பம் பள்ளத்தாக்கு கீழ் முகாமில், செந் நாய்கள் கூட்டம் ஒன்றினால் துரத்தப்பட்ட ஒரு கடமானுக்கு நேரிட்ட கதி பற்றி கேள்வியுற்று, துணுக்குற்றேன். தன்னைத் துரத்தி வருகின்ற கொடிய எதிரியினின்றும் தப்பமுடியாத நிலையில், மிகவும் சோர்ந்து களைத்துப்போன கடமான் முகாம் பகுதிக்குள் ஓடிவந்தது-பாதுகாப்பும் ஓய்வும் அங்கு கிடைக்கும் என்ற எண்ணத்தில் போலும்! ஆனால் நடந்தது என்ன? களைத்திருந்தாலும், உயிருடன் இருந்த அந்த கடமான் மீது அங்கிருந்த மூர்க்கர்கள் சிலர் பாய்ந்து அதை அடித்துக் கொன்று, தசை வேறு நார் வேறாகப் பிய்த்து விட்டனர். அடைக்கலம் நாடிவந்த பிராணியை அடித்துக் கொல்லும் இந்த அருவருக்கத் தக்க வன்செயலை என்னென்பது?

## மனிதன் மாறவேண்டும்

இத்தகைய இழிதன்மையும், மிருகங்களைக் கொல்வதில் ஒரு இன்பம் காணும் வெறி உணர்வும் ஒழிய வேண்டும்.

இயற்கையின் படைப்பில், வாழும் உரிமையைப் பொருத்தவரை, மனிதனும் மிருகமும் சமம். ஒருவர் வாழ்வில் இன்னொருவர் தலையிடுதல் தருமமாகாது. தான் வாழ்வதைப் போல் பிறரையும்—பிற இனங்களையும்—வாழவிடும் சகவாழ்வுக் கொள்கை வேண்டும்.

—"கிராம நலம்"

# ஐ. நா. சபையும்; போர் நிறுத்த முடிவும்!

## போர் நிறுத்தத்துக்கு வரவேற்பு: பிரச்சினைகள் தீருமென்று நம்பிக்கை

**ஐ. நா.வில்**

இந்தியா — பாகிஸ்தான் மோதலைக் கவனித்து வந்த ஐ. நா. பாதுகாப்புச் சபை செப்டம்பர் 20-ம் தேதி நிறைவேற்றிய தீர்மானம் செப்டம்பர் 22-ல் இந்திய நேரப்படி 12-30 மணிக்குப் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று கோரியது.

அத் தீர்மானம் வருமாறு:

"பாதுகாப்புச் சபை,

"இந்தியா, பாகிஸ்தான் அரசாங்கங்களுடன் நாம் நடத்திய ஆலோசனைகள் குறித்துத் தலைமைக் காரியதரிசி அளித்த அறிக்கைகளைக் கருதிப் பார்த்து,

"செப்டம்பர்" 4, 6 தேதிகளிட்ட பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களின் நோக்கங்கள் கைகூடத் தளராது முயன்றுள்ள தலைமைக் காரியதரிசியைப் பாராட்டி,

"இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதி அறிக்கைகளைக் கேட்டு,

"தலைமைக் காரியதரிசியின் அறிக்கை (எஸ்/6683) வேண்டிக் கொண்ட போர் நிறுத்தத்துக்கு இருசாராரும் அளித்தஇரு வேறு பதில்களையும் மனத்தில் கொண்டு; இன்னும் போர் நிறுத்தம் ஏற்படவில்லை என்பதையும் கவலையுடன் கருத்தில் வைத்து,

"காஷ்மீர், மற்றும் அது சம்பந்தமான விவகாரங்களில் இரு நாடுகளுக்குமிடையே தீராதிருக்கும் வேற்றுமைகளை அமைதியாகத் தீர்த்து வைப்பதற்குச் சண்டை விரைவில் நிற்பது இன்றியமையாத முதல் நடவடிக்கையாகும் என்று திண்ணமாய் உணர்ந்து,

"1. 1965 செப்டம்பர் 22-ம் தேதி புதன் கிழமை கிரீன்விச் நேரப்படி காலை 7 மணிக்குப் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று கோருகிறது; அந்த நேரத்தில் போர் நிறுத்தம் ஏற்படும்படியும், அதன் பின் 1965 ஆகஸ்ட் 5-க்கு முன்பிருந்த இடங்களுக்கு ஆயுதந் தாங்கியோர் அனைவரையும் விலக்கிக் கொள்ளும்படியும் உத்தரவிடுமாறு இரண்டு அரசாங்கங்களையும் அழைக்கிறது;

"2. போர் நிறுத்தத்தையும், ஆயுதந் தாங்கிய அனைவரும் விலக்கிக் கொள்ளப்படுவதையும் மேற்பார்ப்பதை உறுதி செய்ய

அவசியமான உதவி புரியுமாறு தலைமைக் காரியதரிசியைக் கேட்டுக் கொள்கிறது.

"3. அங்குள்ள நிலைமையைக் கடுமையாக்கக் கூடிய எந் நடவடிக்கையையும் செய்யாதிருக்குமாறு எல்லா நாடுகளையும் அழைக்கிறது;

"4. செப்டம்பர் 6-ம் தேதியிட்ட சபையின் 210-வது தீர்மானத்தினுடைய செயல்முறைப் பகுதியின் முதல் பாரா அமுலுக்கு வந்ததும், இன்றைய பூசலுக்கு அடிப்படையாகவுள்ள அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உதவியாக என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று யோசிக்க முடிவு செய்கிறது; இதற்கிடையில் இந் நோக்கத்துக்காக இரண்டு அரசாங்கங்களும் சாசனத்தின் 33-வது விதியில் தொகுத்துக் கூறியுள்ளவை உள்பட எல்லா வகையான சமாதான வழிகளையும் பயன்படுத்துமாறு அவற்றை அழைக்கிறது;

"5. இத் தீர்மானம் அமுலாகவும் அமைதியான தீர்வு காணவும் கூடுமான முயற்சி அனைத்தையும் செய்யுமாறும், இது பற்றிப் பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை வழங்குமாறும் தலைமைக் காரியதரிசியைக் கேட்டுக் கொள்கிறது."

தீர்மானம் நிறைவேறியதும் யு. எஸ். தூதர் ஆர்தர் ஜே. கோல்டுபர்க், செப்டம்பர் மாதத்துக்குப் பாதுகாப்புச் சபையின் தலைவர் என்ற முறையில், பின் வருமாறு பேசினார்:

"எல்லாவற்றையும் போல இதுவும் இன்னொரு தீர்மானம் என்பது அல்ல. இம் மாபெரும் சங்கத்தின் வரலாற்றில் நிறைவேறியுள்ள தீர்மானங்களை நான் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். இந்தத் தீர்மானம் ஒரு தனித் தன்மை வாய்ந்தது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதன் தனித் தன்மைக்குக் காரணம் நம்மை எதிர்நோக்கியுள்ள நிலைமையே; இந் நிலைமை தனித் தன்மை வாய்ந்தது; கடுமையானது; கடினமானது. ஆகவே, அத் துணைக் கண்டத்தில் அமைதியின் எதிர் காலத்துக்கு மட்டுமல்ல, உலக சமுதாயம் முழுமைக்குமே மிகவும் முக்கியமான ஒன்று இந்தத் தீர்மானம்.

"பாகிஸ்தான், இந்தியா இவற்றின் பிரதிநிதிகளுக்குச் சபையின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுவிக்க விரும்புகின்றேன். இரு நாடுகளிடமும் நட்பு முறையில் இச் சபை பேசியிருக்கிறது. சாசனத்தின் விதிகளை முழுமையாகத் தலைமேற்கொண்டு இச்சபை பேசியிருக்கிறது. உறுப்பு நாடுகள் யாவும் தம் வேற்றுமைகளைத் தீர்க்க அமைதியான வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது உடன்படிக்கையால் அந்நாடுகள் ஏற்ற கடமை என்கிறது சாசனம்."

தூதர் கோல்டுபர்க் மேலும் கூறியதாவது :—"கட்சிகளிடம்

இது போன்ற ஒரு தீர்மானத்தை அளிக்கும்போது முதலில் ஒரு வகையான உணர்ச்சி உண்டாவதை நான் எனது பல ஆண்டு அநுபவத்தில் பார்த்திருக்கிறேன்; அதன்பின் ஆர அமர எண்ணிப் பார்த்து வேறு ஒரு வகையான உணர்ச்சி தோன்ற வேண்டும். இந்தத் தீர்மானத்தில், போர் நிறுத்தத்துக்கான அடிப்படை மட்டுமல்ல, இந்தியா, பாகிஸ்தான் இரண்டிற்கும் மனம் இருந்தால் அவை தமக்குள்ள அடிப்படையான வேற்றுமைகளை இறுதியாகத் தீர்த்துக் கொள்வதற்கான வழியும் உண்டு. மனம் வேண்டும்; இந்தத் தீர்மானம் என்ன சொல்கிறது என்பதை இந்தியா, பாகிஸ்தான் இரண்டும் கண்டு கொள்ளவும் வேண்டும்; ஏனெனில், இச்சபை உறுப்பினர்களின் கருத்துக்களை அது எடுத்துரைக்கிறது; இவற்றை அவை மிகவும் கருத்தாகக் கவனிக்கும் என்பது பற்றி எனக்கு ஐயம் இல்லை.''

அதன் பின் கோல்டுபர்க், அமெரிக்காவின் பிரதிநிதி என்ற முறையில் பின்வருமாறு பேசினார்:

''இந்தியா, பாகிஸ்தான் அரசாங்கங்களுடனும் மக்களுடனும் அமெரிக்காவுக்குள்ள நட்புறவுகளின் வரலாற்றை (இதற்கு முன்) இச் சபையில் எடுத்துரைத்தேன். இரு நாடுகளுக்குமிடையேயுள்ள பிரச்னைகளை அமைதியாகத் தீர்ப்பதற்கு வழிகாணப் பாதுகாப்புச் சபை மூலமாக இவ் விவகாரங்களில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் எல்லோரும் ஒப்புக்கொண்ட கருவியாகிய ஐ. நா. மூலமாக—உதவி புரிய இதே நட்புறவுடன் எனது அரசாங்கம் சிறந்த முறையில் முயற்சி செய்யும் என்று உறுதி கூறியுள்ளேன்.

''அரசியல் அறிஞர்களாகச் சிறந்து விளங்க வேண்டுமென்று பாதுகாப்புச் சபை தம் தலைவர்களுக்கு விடுத்திருக்கும் அறைகூவலை இந்தியா, பாகிஸ்தான் மக்கள் புரிந்துகொண்டு, ஆதரிக்க வேண்டும் என்று அவர்களை அமெரிக்க மக்களின் சார்பாக நான் அழைக்கிறேன். அமெரிக்க மக்கள் இவ் விவகாரத்தில் ஆழ்ந்த உணர்ச்சி கொண்டு இதை மிகுந்த கவலையுடன் கவனித்து வருகிறார்கள்.

''இன்று நம் முன் இருக்கும் இது போன்ற பிரச்னைகளையும் தகராறுகளையும் சமாளிப்பதற்குத்தான் இம் மன்றம்—ஐ. நா. நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்களாகிய நாம் இதை அமைதியின் பொருட்டு எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே இதன் வெற்றி அமையும். (இப் பாதுகாப்புச்) சபையின் உறுப்பினர்கள் இன்றிரவு இதை அமைதியின் பொருட்டுப் பயன்படுத்தியிருக்கிறார்கள்; நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது என் கருத்து.

"இத் தீர்மானம் எழுதப்பட்டு நிறைவேற்றப்பட்ட இதே பண்புடன் தீர்மானத்தின் முழுப் பொருளையும் ஏற்று நடப்பது, சம்பந்தப்பட்ட அரசாங்கங்களின் பெரும் கடமையாகும். அமைதிக்கு உழைப்பதும் தங்கள் வேற்றுமைகளைத் தீர்க்க அமைதியான வழிகளைப் பயன்படுத்துவதும் எந்த நாட்டையும் எந்த நாட்டு மக்களையும் புண்படுத்தாது.

போர் நிறுத்தத்துக்கு இணங்குவதாக செப்டம்பர் 21-ந் தேதி இந்தியா தெரிவித்தது. பாகிஸ்தானின் பதில் செப்டம்பர் 22-ம் தேதி கிடைத்தது; அப்போது, சபை குறித்திருந்த காலக் கெடு முடிவதற்குச் சில நிமிடங்களே இருந்தன. களத்திலுள்ள தளபதிகளுக்கு அறிவிக்க நேரம் கிடைக்கும் பொருட்டு, இந்தியத் தூதர் ஜி. பார்த்தசாரதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சபை தன் காலக்கெடுவை 15 மணி நேரம் நீடித்து செப்டம்பர் 23 காலை 3-30 மணி வரை போர் நிறுத்தத்தை ஒத்திவைத்தது.

தூதர் கோல்டுபர்க் மீண்டும் சபைத் தலைவர் என்ற முறையில் பேசுகையில்,போர்நிறுத்தம்பற்றி இறுதியாக உடன்பாடு ஏற்பட்டது குறித்துப் பாராட்டினர்.

"ஐ. நா. வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் இது ஒரு முக்கியமான நாள்", என்றார் கோல்டுபர்க். இவ்வகையில் தலைமைக் காரியதரிசி ஊதாண் செய்த ஆழமான, நடுநிலைமையான, துணிச்சலான முயற்சிகளைத் தூதர் புகழ்ந்தார். "துயமம் மிக்க இந்தப் போர் மீண்டும் ஒருநாளும் ஏற்படாது போகும் பொருட்டும், நாம் எல்லோரும் பெரிதும் நட்புக் கொண்டுள்ள இந்த இரண்டு அண்டை நாடுகளும் நட்புறவான ஒத்துழைப்பு, அமைதி, இணக்கம் ஆகிய பண்போடு மீண்டும் நட்புறவு வழி நடக்கும் பொருட்டும் சிறந்த நல்லுணர்வு கொள்வதற்கு இந்தப் போர் நிறுத்தம் முதல் படியாக இருக்க வேண்டும்" என்றார் கோல்டுபர்க்.

"இந்தியாவும் பாகிஸ்தானும் உலகின் நன்மைக்கு எவ்வளவோ செய்ய வேண்டியதிருக்கிறது; இவ்விரு நாடுகளையும் உலகம் மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் மதித்து நோக்குகிறது" என்று கோல்டுபர்க் வலியுறுத்தினர்.

"செப்டம்பர் 23-ல், ஐ. நா. பொதுச் சபையின் 20-வது கூட்டத்தில் தூதர் கோல்டுபர்க் தம் பேருரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"கண்ணியமான தீர்வு ஏற்படுவதும், நிலையான அமைதிக்குரிய நிலைமை திரும்புவதும் இந்தியா, பாகிஸ்தான் இரண்டிற்குமே நன்மை.

41-ம் பக்கம் பார்க்க

● சுதந்திரக் காற்றுகூட இல்லை!

● 11 தடவை ஆட்சி மாறிவிட்டது!

● நிர்வாகத்தில் ஏராளமான ஊழல்!

# 'ஆசாத் காஷ்மீர்'

# ஒரு கட்டுக் கதை!

பாகிஸ்தான் ஆக்ரமித்துள்ள காஷ்மீர் பகுதியில் அரசாங்கம் ஒன்று இருப்பதாகச் சொல்வதெல்லாம் வெறும் அரசியல் கட்டுக்கதை. பாகிஸ்தான் ஆட்சியாளர்களே திரித்துள்ள கதை. அங்கு பொம்மை அதிபர்களின் வரலாறு பாகிஸ்தான் அரசாங்கத்தின் காஷ்மீர் விவகார இலாகாவின் சிந்தனைக்கு ஏற்ப மாறும்.

ஆசாத் காஷ்மீர் எனக் கூறப்படும் அந்தப் பகுதியில் மக்கள் சுதந்திரத்தைக் கண்டதில்லை. பாக். அரசாங்கத்தின் கையில் தான் அவர்கள் தலைவிதி இருக்கிறது. இதை "ஆசாத்" காஷ்மீரின் தலைவரான பஷீர் அகமத் ஷேக் என்பவரே தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

அங்குள்ள மக்கள் தங்கள் தனித் தன்மையை இழக்கும்படி பாகிஸ்தானின் ஆட்சி நடைபெறுவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. இதுவரை 12 "அரசாங்கங்கள்" அந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கின்றன. அண்மையில், அந்த அரசாங்கத்தின் கொடிக்குப் பதில் பாக். தனது கொடியையே பறக்க விட்டுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியின் 'அரசாங்க'த்தை அரசாங்கம் என்று கூறுவது எவ்விதத்திலும் பொருந்தாது. அதன் பொம்மை அதிபர்கள் பாகிஸ்தானிடம் கூலிவாங்கும் தலைவர்கள்.

1947 அக்டோபர் மாதம் காஷ்மீரில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடத்தியபோது இந்த "ஆசாத் அரசாங்க"க் கட்டுக் கதையை அது உருவாக்கியது முதல் அரசாங்கம் 1947 அக்டோபர் 21-ந் தேதி அமைக்கப்பட்டது. சர்தார் முகம்மத் இப்ராகிம் கான் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1949-ம் ஆண்டு ஆரம்பத்தில் அங்கு நடைபெற்ற அக்கிரமங்களை எதிர்த்து மக்கள் திரண்டெழுந்தனர். அதையடுத்து சர்தார் முகம்மத் இப்ராகிம் கான் 1949 மார்ச் மாதம் ராஜிநாமாச் செய்தார்.

சர்தார் இப்ராகிம்மையே அதிபராக நியமித்து ஒரு மந்திரி

சபையை பாகிஸ்தான் அமைத்தது. அன்றாட நிர்வாகத்தை மட்டுமே ஆசாத் காஷ்மீர் அரசாங்கம் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும், மற்ற கொள்கை விஷயங்கள் பாகிஸ்தான் அரசாங்கமே நிர்ணயிக்கும் என்றும் விதிக்கப்பட்டது.

1949 மே 26-ல் காஷ்மீர் விவகாரத்திற்கு ஒரு மந்திரி நியமிக்கப்பட்டார். எம்.ஏ. குர்மானி புதிய இலாகா பொறுப்பேற்றார்.

ஆனால் ஆறு மாதங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டு குர்மானியும், சர்தார் இப்ராகிமும் பதவியை விட்டு விலக நேர்ந்தது.

இதற்குக் காரணமாயிருந்த சௌத்ரி குலாம் அப்பாஸ், ஆசாத் காஷ்மீரின் மந்திரி சபையை அலி அகமத் ஷா தலைமையில் மாற்றி அமைத்தார். 1950 மார்ச்சு முதல் தேதி புதிய அரசாங்கம் பதவியேற்றது.

பாகிஸ்தான் அரசாங்கமே அங்கு கையாட்களை நியமித்தது. அது முதல், ஊழல் தலைவிரித்தாடத் தொடங்கியது. அரசியல் குழப்பமே அங்கு நிலவியது. மக்கள் ஜம்மு காஷ்மீர் செழிப்புற்று விளங்குவதைக் கண்டு, இந்தியாவுடன் தம் வருங்காலம் அமைய வேண்டும் என்று எண்ணினர்.

சில காலத்திற்குப் பிறகு சர்தார் இப்ராகிம் இந்தியாவுடன் சேரத் தாம் தயார் என்றும் அதன் காரணமாகத்தான் தம்மை பாகிஸ்தான் பதவியை விட்டு விலக்கியது என்றும் ஒரு பத்திரிகாசிரியரிடம் தெரிவித்தார்.

சர்தார் இப்ராகிமின் இந்தக் கருத்தை "ஆசாத் காஷ்மீ"ரிலிருந்து விடுதலையான அவில்தார் கிஷன்தார் ஊர்ஜிதம் செய்தார். பூரக், அரசாங்கம் இதை அறிந்தது. சர்தார் இப்ராகிமின் ஆதரவாளர்கள் "ஆசாத் காஷ்மீர்" படையிலிருந்து விலக்கப்பட்டனர்.

1951 ஜூலைக்குப் பிறகு "ஆசாத் காஷ்மீர்" அரசாங்கத்தின் அதிகாரமும் குறைக்கப்பட்டது. நிர்வாகம் பாகிஸ்தான் அதிகாரிகளின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

1951 டிசம்பரில், பொது மக்கள் கிளர்ந்தெழவும், 'ஆசாத் காஷ்மீர்' அரசாங்கத்தின் அதிபர் ராஜிநாமாச் செய்தார். தேர்தல் நடத்தி மந்திரிசபை அமைப்பதாக உறுதி கூறப்பட்டது. அது வரை அரசாங்கத்தை நிர்வகிப்பதற்காக மீர் வைஸ் மொகமத் யூசப் ஷா தற்காலிக அதிபராகப் பதவியேற்றார். சௌதுரி குலாம் அப்பாஸ் தாம் அரசியலிலிருந்து விலகுவதாக அறிவித்தார். ஆனால் நெடுங்காலத்திற்கு அவரால் வாளாவிருக்க முடியவில்லை.

கர்னல் ஷேர் அகமத்கான் தலைமையில் புதிய அரசாங்கத்தை 1952 ஜூன் 21-ந் தேதி பாகிஸ்தான் ஆட்சியாளர் அமைத்

தனர். இப்புதிய அரசாங்கம் சில அடிப்படைப் பிரச்னைகளைக் கிளப்பியது.

இதுவரையில் முஸ்லிம் மகாநாட்டின் பெயரில் பாகிஸ்தான் எல்லாவற்றையும் செய்து வந்தது. இப்போதோ இந்தத் திரை கிழித்தெறியப்பட்டு விட்டது. புதிய மந்திரி சபையை முஸ்லிம் கட்சி கைவிட்டது. குலாம் அப்பாஸ் மௌனம் சாதித்தார். வேறு எவருமே புதிய மந்திரி சபையின் உதவிக்கு வரவில்லை. புதிய அரசாங்கம் எந்த அரசியல் சட்டப்படி அமைந்திருக்கிறது என்று மக்களும் கேட்கத்தொடங்கினர். அத்துடன் மந்திரிகளுக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு, அந்த அரசாங்கமும் கவிழ்ந்தது.

1954 மே 15-ந் தேதி மற்றொரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. கர்னல் ஷேர் அகமதுக்கு மீண்டும் "அதிபர்" வேலை கிடைத்தது.

அரசாங்க அலுவல்களில் பாகிஸ்தானின் காஷ்மீர் இலாகா மந்திரி தலையிடுவதைக் கண்டித்துத்தான் முந்தைய மந்திரிகள் ராஜிநாமாச் செய்தனர். இந்த நேரத்தில், "ஆசாத் காஷ்மீர்" தலைவர்களும் தேர்தல் நடத்த வேண்டுமெனக் கோரினார்கள்.

அரசாங்கத்தில் தங்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்று மக்கள் வற்புறுத்தினார்கள். இது, ஷேர் அகமதின் வெளியேற்றத்தில் முடிந்தது.

மீண்டும் யூசுப் ஷா தற்காலிக அரசாங்கப் பொறுப்பை ஏற்றார். மக்களை ஏமாற்றத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1956 செப்டம்பரில் சர்தார் அப்துல் கய்யூம்கான் "ஆசாத் காஷ்மீரி"ன் அதிபராக பதவியேற்றார். ஆயினும்பொதுத் தேர்தல் வேண்டும் என்ற கோரிக்கை பெரியதாகியதே தவிரக் குறையவில்லை. அவரும் பதவியை ராஜிநாமாச் செய்ய நேர்ந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் பதவிக்கு வரும் காலம்வரை குர்சித் ஹாசன் குர்சித் என்பவர் பதவியில் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது. இப்போது முஸ்லிம் மாநாட்டின் செயற்குழு இந்த விவகாரத்தில் தலையிட்டது.

குர்சித்தும் தம் முன்னோர்களின் வழியையே பின்பற்றினார். இந்தச் சமயத்தில் அயூப்பிற்கு யோசனை ஒன்று தோன்றியது. பாக். அரசாங்கப் பாவையாயிருந்த தலைமை நீதிபதி அப்துல் ஹமீத்கானையே அதிபாக நியமித்தார்.

"ஆசாத் காஷ்மீர்" ஒரு காலனியின் நிலைமைக்கு வந்து பாக். அதிகாரிகள் தான் 'ஆசாத் காஷ்மீ'ரின் உண்மையான ஆட்சியாளராக ஆகிவிட்டனர் என்றும்

கூறிய மகஜர் ஒன்றை பாகிஸ்தான் சட்டசபை உறுப்பினர்களுக்கு ஜம்மு காஷ்மீர் முஸ்லிம் கட்சி அனுப்பியது.

"ஆசாத் காஷ்மீரின்" சார்பில் ஒருவர் பாகிஸ்தான் சட்டசபையில் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளை எடுத்துக் கூறினர்.

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலுள்ள காஷ்மீர் பகுதியின் முன்னுள் அதிபர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களே அங்குள்ள பரிதாபகரமான நிலைமைக்குச் சான்றுகளாகும்.

சௌதுரி குலாம் அப்பாஸ் 1961-ல் இவ்வாறு கூறினர்.

"அடிப்படை ஜனநாயக மன்றம் என்பது, உண்மையில் அதிகாரவர்க்கத்தின் மற்றொரு பெயர் தான்...ஆசாத் காஷ்மீரில் இந்த அடிப்படை ஜனநாயகம் ஒரு பித்தலாட்டம்"

இவ்வாறு அவர்கள் எவ்வளவு நாட்கள் தொடர்ந்து நடத்திவரப் போகிறார்கள் பாக். வசமுள்ள பிரதேசத்தின் மக்களுக்கு அவர்களுடைய ஜனநாயக உரிமையை எவ்வளவு காலம் மறுக்கமுடியும்? மக்கள் விழித்தெழும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதை பாகிஸ்தானியத் தலைவர்கள் உணரவேண்டும்.

—"முரசொலி"


"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# சுகர்ணோவின் அலங்கோலம்!

கம்யூனிஸ்டுகள் சம்பந்தப் பட்டு நீண்ட ஓர் உள் நாட்டு யுத்தம் இந்தோனேசியாவில் நடந்தால், அது ஏற்கனவே பொருளாதாரக் குழப்பத்தின் விளிம்பில் நிற்கும் அந்நாட்டைப் பேராபத்தில் கொண்டு தள்ளிவிடும்.

—இவ்வாறு "அசோஸியேட்டட் பிரஸ்" செய்திக் கட்டுரை ஒன்றை டான் ஹட் என்பார் தொடங்கியுள்ளார்.

உலகிலேயே ஐந்தாவது பெரிய நாடு இந்தோனேசியா என்றும் என்ற போதிலும் பொருளாதார நெருக்கடி படுமோசமாக அங்கே நிலவுகிறது என்றும் அவர் வர்ணிக்கிறார்.

டான் ஹட் மேலும் எழுதுவதாவது:-தனி மனித ஆட்சியை நிலை நிறுத்தப் போராடும் அதிபர் சுகர்ணோ, தேசத்தை வேகமாக அடித்துச் செல்லும் மூர்க்கத்தனமான பண வீக்கத்தைத் தான் கட்டுப்படுத்த முடியவில்லை என பகிங்கரமாக ஒப்புக் கொண்டார்.

இந்தோனேசியா தன் சொந்தக் காலிலேயே நிற்கும் செழுமை கொண்டதெனக் கூறி, இந்தப் பண வீக்கத்தை ஓராண்டுக்குள் நீக்க வேண்டுமென சுகர்ணோ உத்தரவிட்டார். இது தற்போதைய நெருக்கடி தொடங்குவதற்கு முன் நடந்தது.

இந்தோனேசிய நாணயம் கெட்ட நிலையிலுள்ளது. ஒரு டாலருக்கு 16000 ரூபியா என ரூபியாவின் (இந்தோனேசிய நாணயத்தின்) மதிப்பு பெரும் வீழ்ச்சியடைந்திருக்கிறது. ஆனால் இதுவரை அதிகார பூர்வமான உயர் விகிதம் ஒரு டாலருக்கு 45 ரூபியாதான்.

இந்தோனேசியாவிலுள்ள பத்தாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட இந்திய வியாபாரிகள் தம் உடைமைகளை இழக்கும்படி செய்தனர்.

காஷ்மீர்த் தகராறில் இந்தோனேசியா தனது ஆதரவை இந்தியாவுக்குத் தெரிவித்து விட்டது.

இந்தியத் தூதுவரகத்திற்கு எதிராகக் கம்யூனிஸ்டுகள் தலைமையில் நடந்த வன்முறைப் புரட்சிக்குப் பின்னர் ஜாகர்தாவில் இருந்த இந்தியக் கடைகள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன.

இந்தோனேசிய வாழ்க்கைப் புள்ளியைப் பார்ப்போம். அது 1955-ல் 100 புள்ளி ஆக இருக்

தது என வைத்துக் கொண்டால், 1965 நடுவாக்கில் 1500 புள்ளியாக உயர்ந்துள்ளது.

இங்கே மக்களின் முக்கிய உணவு அரிசி. அதன் விலை ஜனவரியிலிருந்ததற்கு இப்போது 600 சதவிகிதம் உயர்ந்து விட்டது. இப்போது சராசரி மனிதனின் கைக்கு எட்டவே யில்லை.

பொருளாதாரம் சீர்குலைந்து கொண்டிருக்கிறது. அதே வேளையில் முன்னைப் போதையும்விட அதிகமாக நவீன கார்கள் ஜாகர்தா வீதிகளில் பறக்கின்றன.

சீனர்கள் ஆதிக்கம் செலுத்தும் கடை வீதிகளில் ஆடம்பரப் பொருள்கள் கிட்டுகின்றன.

முக்கியமான ராணுவ அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் மனைவிமார்கள் விலையுயர்ந்த துணிகளில் வருகின்றனர், விலையுயர்ந்த நகைகளில் மின்னுகின்றனர்.

என்ன நடக்கிறது என்பதை முற்றிலும் அறிந்தே இருக்கிறார் டாக்டர் சுகர்ணோ.

விலைவாசி உயர்வை வைத்துத் தனது அரசுக்கு எதிராக நடக்கும் பிரச்சாரத்தையும் நித்திய ஆர்ப்பாட்டங்களையும் பார்த்து அவருக்கு எரிச்சல் வந்து விட்டது.

இந்த இயக்கத்துக்குத் தலைவர் கம்யூனிசத் தூணான தோழர் டி.என், அய்டிட் ஆவார். தற்போதைய கொந்தளிப்பில் இவர் பங்கு என்ன? அது இன்னும் தெளிவாகவில்லை.

விலையேற்றக்காரர்களைக் கண்டிக்கும் பதாகைகளோடு ஜாகர்த்தா வீதிகளில் வலம் வருவதற்காக, தோழர் அய்டிட் பல இளைஞர் நிறுவனங்களைக் கையில் வைத்துள்ளார்.

கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு வெளியேயிருக்கும் கம்யூனிஸ்டு கட்சிகளில் இந்தோனேசியாவினுடையதுதான் பெரியது. அதில் மூன்று கோடி உறுப்பினர்கள் உள்ளனர். அதன் தலைவரான அய்டிட், அறியாத பலரை அமைச்சராக்கி கொள்கிறார் என சுகர்ணோ மீது குற்றம் சாட்டினார். நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட பெரும் உள் அமைச்சரவையை சுகர்ணோ வைத்திருக்கிறார். இந்தோனேசிய பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க அது செய்த முயற்சிகள் தோற்று விட்டன.

விலையேற்றக்காரர்கள் மீது, கம்யூனிஸ்டுகள் தம் தாக்குதல்களைக் குவித்தனர். இவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை வேகமாக நசியச் செய்கிறார்கள் என கம்யூனிஸ்டு கட்சி குற்றம் சாட்டுகிறது.

இந்தோனேசிய தேசத்தின் கேந்திரமான தீவாகும் ஜாவா. இதன் நெடுகிலும் வலிமை

படைத்த ஆதரவை, தோழர் அய்டிட் பெற்றுள்ளார்.

மத்திய ஜாவாவில், கம்யூனிஸ்டு கட்சி ஸ்தாபனம் வலிமையாயுள்ளது. அங்கு கம்யூனிஸ்டுகளும் ஆதரவாளர்களும் தற்போது குவிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத அமைப்பான தாருல்-இஸ்லாம், முன்பொருபோது 12 ஆண்டு காலம் அரசாங்கத்தோடு போராடிய பகுதிகளை நோக்கி இவர்கள் போகிறார்கள். இந்தோனேசியாவில் முஸ்லிம் அரசு ஏற்படப் போராடிய ஸ்தாபனமாகும் தாருல்-இஸ்லாம்.

அரசாங்கத்தின் வலிமை சீர்குலைந்து விட்டால், ஓர் உள்நாட்டு யுத்தம், இந்த மத ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளுக்கு மீண்டும் உயிரூட்டும்.

கடந்த ஆண்டு அமெரிக்காவிடம் "உன் உதவியும் வேண்டாம்! நீயும் வேண்டாம்! போய்த் தொலை!" என்று டாக்டர் சுகர்ணே கூறிவிட்டார். ஐ. நா. விலிருந்தும் தன் நாட்டை வெளிக் கொண்டு வந்து விட்டார். அதிலிருந்து நிதி உதவிக்குத் தனது புதிய கூட்டாளியான சீனாவிடம் அது செல்ல வேண்டி வந்தது.

இந்தோனேசியக் கம்யூனிஸ்டுகள் சீனக் கம்யூனிஸ்டுகளால் ஆதரிக்கப்படுகிறது.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக உள்நாட்டு யுத்தம் உருவாக்கப்படுகிறதென்றால், பின்னர் பீகிங்கிடமிருந்து டாக்டர் சுகர்ணே பொருளாதார உதவி எதையும் எதிர்பார்க்க முடியாது. தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அவருக்கு பீகிங்கின் நிதி உதவி தேவைப்படுகிறது.

இந்தோனேசியக் கம்யூனிஸ்டுகளால் அல்லது கம்யூனிஸ்டு ஆதரவாளர்களால் தனது ஜெனரல்கள் அறுவர் கொல்லப்பட்டு விட்டதால், ராணுவம் கசப்படைந்திருக்கிறது. பீகிங்குடன் நெருங்கிய உறவு கொள்ளத்தான் வேண்டுமென்று டாக்டர் சுகர்ணே வற்புறுத்தி, அதற்கு இந்த ராணுவம் அனுதாபம் காட்டாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

64-வயது நிறைந்த ஆயுள் கால ஜனாதிபதி சுகர்ணே இதை நன்கு அறிந்திருப்பார் எனக் கருதப்படுகிறது.

வேறெங்கிருந்தும் இந்தோனேசியா பொருளாதார நிவாரணம் பெறாவிட்டால், உள்நாட்டு யுத்தத்தைத் தடுத்து நிறுத்த முடியா விட்டால், டாக்டர் சுகர்ணேவின் "வழி நடத்தப்படும் ஜனநாயகம்" தன் பயணத்தின் முடிவைச் சந்தித்து விடும்.

—"முரசொலி"

# இந்திய ஒருமையும்; எதிரியின் கதறலும்!

## 23 நாள் போர் காட்டிய பாடம்!

புதுடில்லி, செப். 30— 23 நாட்களாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற போர் கற்பித்த பாடங்களை இந்திய அரசின் செய்தித் துறை வெளியிட்டுள்ளது.

அந்த விவரம் வருமாறு:

ஐ. நா. பாதுகாப்புச் சபை விடுத்த வேண்டுகோளை அடுத்து, இந்தியா—பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் நிம்மதியற்ற அமைதி நிலவுகிறது. இந்த அமைதி நிலைப்பதும், மோசமாவதும், பாகிஸ்தானின் கையில் தான் இருக்கிறது. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை இந்தியா ஏற்றுக் கொண்டதானது சென்ற 18 ஆண்டுகளாக அது பின்பற்றி வரும் சர்வதேசக் கொள்கைக்கு மட்டுமின்றி, இந்தியா பாகிஸ்தான் உறவில் அது காட்டிவரும் மனப்பான்மைக்கும் கூட முற்றிலும் பொருந்தும்.

செப்டம்பர் மாதம் முதல் இருபது நாட்கள் நடைபெற்ற சம்பவங்களிலிருந்து இரண்டு உண்மைகள் வெளிப்படுகின்றன. ஒன்று, இந்தியா அமைதியையே தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது, நாட்டின் உறுதிப்பாட்டையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பில் குறுக்கிடாது என்பது. இரண்டாவது உண்மை செப்டம்பர் 23-ந் தேதி தலைமை அமைச்சர் லால்பகதூர் கூறியது போல் மீண்டும் தப்புக் கணக்குகள் போடவேண்டாம். "இந்தியாவின் ஒரு பகுதியாக காஷ்மீர் ராஜ்யத்தையோ, நமது பிரதேசத்தின் எந்தப் பகுதியையுமோ பாகிஸ்தான் மீண்டும்தாக்கினால், அதை முழு உறுதியுடனும், பலத்துடனும் எதிர்ப்போம்" என்று சாஸ்திரி எச்சரித்திருக்கிறார்.

இந்தியாவின் நிலை நன்கு தெளிவாக இருக்கிறது. பாகிஸ்தானின் நிலையோ ஒரு புதிராகவே உள்ளது. அதிபர் அயூப்கானும் பாகிஸ்தானின் வெளி உறவு மந்திரியும் விடுத்துள்ள மிரட்டல்களைப் பார்த்தால், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அமைதி ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.

இந்தியா எவ்வளவுதான் அமைதி வழியை விரும்பினாலும், அதிபர் அயூப்கானின் நோக்கை

அதற்குக் காரணம் இருக்குமானால், இந்தியா-பாகிஸ்தான் உறவில் நெருக்கடி குறைவதற்கு இடமில்லை.

ராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அதிபர் அயூபின் நோக்கங்கள் யாவை? ஐ. நா. தலைமைச் செயலாளரிடம் அவர் தெரிவித்த மூன்று அம்ச திட்டத்திலிருந்து இந்தியத் துருப்புக்களை வெளியிட்டால் அந்த ராஜ்யத்தை எளிதில் பிடித்துக் கொண்டு விடலாம் என்பது அவாது எண்ணம்.

ஜம்மு காஷ்மீரில், ஆப்ரிக்க ஆசிய படை ஒன்றைப் புகுத்தி விட வேண்டுமென்பது அவரது இரண்டாவது யோசனை. ஆசிய ஆப்ரிக்க நாடுகள் தன் வலையில் விழ வேண்டுமென்ற எண்ணத்தில்தான் பாகிஸ்தான் இந்த யோசனையைக் கூறியிருக்கிறது. உலகக் கருத்தைக் குழப்புவதற்காகவும் காஷ்மீரைத் திடீரென கைப்பற்றுவதற்காகவுமே பாகிஸ்தான் இந்த இரண்டு யோசனைகளையும் தெரிவித்தது என்ற கருத்து வலுவடைந்து வருகிறது. பாதுகாப்பு சபை தீர்மானங்களின் அடிப்படையில் பாகிஸ்தான் போர் ஓய்வுக்குச் சம்மதிக்க வேண்டுமென்று அதிபர் அயூபுக்கு அரபு மாநாடு புத்திமதி கூறியது. சுயநிர்ணய உரிமை, வாக்கெடுப்பு என்ற பாகிஸ்தானியக் கொள்கைகளும் உலக அரங்கில் தவிடுபொடியாகி விட்டன.

## நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று

பாகிஸ்தான் சவாலுக்கு இந்தியா கொடுத்த பதில் அதன் நோக்கங்களுக்கு உலைவைத்து விட்டது. எதிர்பார்த்த புரட்சி காஷ்மீரில் ஏற்படவில்லை, மாறாக பாக். அனுப்பிய கொள்ளைக்காரர்களைப் பிடிப்பதில் காஷ்மீர் மக்கள் உற்சாகத்துடன் ஒத்துழைத்தனர்.

பாகிஸ்தான் நடத்திய தாக்குதலினால், ஜம்மு காஷ்மீர் மக்களிடையே பாகிஸ்தானைப்பற்றி இருந்த பயம் மேலும் அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் வகுப்புக் கலவரங்கள் தோன்றும் என்று பாகிஸ்தான் கண்ட கனவும் பொய்யாயிற்று. இந்திய மக்கள் அனைவரும் ஆக்ரமிப்பாளரை விரட்டியடிக்க உறுதி கொண்டுள்ளனர்.

இந்திய மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர் என்பதை அதிபர் அயூப் மறந்து விட்டார்போலும். தங்கள் சுதந்தரத்தைக்காக்க அவர்கள் திரண்டெழுந்ததில் ஆச்சரியம் அதுதான். அதிபர் அயூபுக்கும் அவரது போர்ச் சகாக்களுக்கும் பேரதிர்ச்சியைத் தந்திருக்கிறது. இந்த 23 நாள் போர்'' அதிபர் அயூப்கானுக்கு பாடம் கற்பித்திருக்குமானால், அமைதியை நிலைநாட்டுவதற்கு அவர் நிச்சயம் முன்வருவார்.

# ராணுவம்—ஒரு விளக்கம்

[பத்திரிகைச் செய்திகளில் ராணுவச் சொற்கள் வரும் பொழுது வாசகர்களில் பலர் பொருள் புரியாது அவதி அடைகின்றனர். அதைக் கருதி சில சொற்களுக்குக் கீழே விளக்கம் தரப்படுகின்றன.]

**ராணுவம்**

யுத்த களத்தில் போரிடும் முழு ராணுவ அணி. இதற்குத் தலைவராக அனுபவமிகுந்த ஒரு ஜெனரல் இருப்பார். ஒரு நாட்டுக்கு இது போல் பல யுத்த கள அணிகள் இருக்கலாம்.

**கோர்**

மூன்று கோர் கொண்டது ஒரு ராணுவம். கார்ப்சுக்குத் தலைவராக ஒரு லெப்டினென்ட் ஜெனரல் இருப்பார்.

**டிவிஷன்**

மூன்று டிவிஷன்கள் கொண்டது ஒரு கோர். இதில் 12,000 முதல் 20,000 சிப்பாய்கள் வரை இருப்பதுண்டு. இதற்குத் தலைவராக ஒரு மேஜர் ஜெனரல் இருப்பார்.

**பிரிகேட்**

மூன்று பிரிகேட்டுகள் அடங்கியது மேலே சொல்லப்பட்ட டிவிஷன். பிரிகேட்டுக்குத் தலைவராக இருப்பவர் தான் பிரிகேடியர். இதில் 4000 முதல் 5000 சிப்பாய்கள் இருப்பார்கள். இது தான் குறைந்தபட்ச யுத்தத்திற்கான கூட்டு அமைப்பு. அதாவது இதில் நிர்வாக ஊழியத் துறை உண்டு. டிவிஷனிடமிருந்து பீரங்கி கவசப் பகுதியையும் பெற்றுக் கொண்டு தனித்து யுத்தக் காரியங்களுக்காக இவற்றாலும் செல்ல இயலும்.

**பட்டாளம்**

காலாட் படையின் அடிப்படையான அணி 400 முதல் 800 பேர் இருப்பார்கள். இதற்குத் தலைவர் லெப்டினென்ட் கர்னல்.

**கம்பெனி**

பட்டாளத்தில் 4 முதல் 6 கம்பெனிகள் இருக்கும். இதற்கு மேஜரோ, காப்டனோ தலைவராக இருப்பார். 80 முதல் 120 சிப்பாய்கள் இருக்கலாம். பிற உதவி ஆயுதங்கள் பெற்றும் தனித்தும் யுத்த காரியத்தை இது மேற்கொள்ளலாம்.

**பிளாட்டூன்**

கம்பெனியில் மூன்று அல்லது நான்கு பிளாட்டூன்கள் இருக்கும். ஜூனியர் கமிஷன் அதிகாரி தலைவராக இருப்பார். இதில் 25 முதல் 35 சிப்பாய்கள் இருப்பர்.

**செக்ஷன்**

பிளாட்டூனில் மூன்று நான்கு செக்ஷன்கள் அடங்கும். இதற்கு கமிஷன் அந்தஸ்து இல்லாத அதிகாரி தலைவராக இருப்பார். 8 முதல் 12 சிப்பாய்கள் இருப்பார்கள்.

## படை வகைகள்

### காலாட் படை

எல்லாப் படைகளுக்கும் ஆதாரமான அம்சம். ரெஜிமென்ட் அல்லது பட்டாளங்களாக இவை அமைக்கப்பட்டிருக்கும். ரைபிள், பைனெட் (துப்பாக்கி சனியன்) கிரினேட், (கைக்குண்டு) சப்-மிஷின் பீரங்கி, மிஷின் பீரங்கி, லேசான மார்டர், டாங்கிகளுக்கு வைரியான பசூகா இவையே இவர்களுடைய ஆயுதங்கள்.

### பீரங்கிப் படை

தாக்குவதற்கோ தற்காத்துக் கொள்வதற்கோ காலாட் படைக்கு ஆதாரவாகப்பயன் படுத்தப்படும். பலவித எடையுள்ள வெடிகுண்டுகளை 1000 கெஜம் முதல் 15 மைல் வரை கக்கி எறியக் கூடியவை. மலை பீரங்கிகள், தரை பீரங்கிகள், இடைரக பீரங்கிகள் ஆகியவைகளும் உள்ளன. நேராகப் பார்த்தே இவைகளை சுழற்றி வெடிக்கச் செய்ய முடியும். கண்ணால் பார்க்காமல் தேசப்படங்களையும் காம்பஸ்களையும் உபயோகித்தும் இவற்றை வெடிக்கச் செய்வதுண்டு.

கனமான மார்டர்கள், டாங்கி எதிர்ப்பு பீரங்கி, விமானம் சுடும் பீரங்கி, கடற்கரையோரப் பாதுகாப்பு பீரங்கி ஆகியவையும் இப்பகுதியில் இருக்கும்.

### கவசமணிந்த வாகனத்துறை

இத்துறையில் டாங்கிகளும் கவசமணிந்த மோட்டார்களும் இருக்கும். எதிரியின் வாகனங்களைத் தாக்கவும் காலாட் படைக்கு ஆதரவாகவும் இவை இயங்கும்.

### சமிக்ஞைகள்

யுத்தத்தில் ராணுவத்தாருக்கு உத்தரவுகள் சமிக்ஞைகள் மூலம் தான் கிடைக்க முடியும். இந்த சமிக்ஞைப் படை கம்பியில்லாத் தந்தி, டெலிபோன், தபால் எடுத்துச் செல்லும் துறை ஆகியவற்றைக் கொண்டு கட்டளைகளையும் செய்திகளையும் விநியோகம் செய்வார்கள்.

### எஞ்சினியர்கள்

ராணுவத்தின் வெற்றிக்கு வெகு முக்கியமான துறை. அவர்கள் சுரங்கக் கண்ணி வைப்பார்கள். எதிரிகளுடையதைக் கலைப்பார்கள். ரோடுகள், பாலங்கள், ரயில்கள், விமான நிலையங்கள், தண்ணீர் சப்ளை கேந்திரங்கள் ஆகியவற்றை அமைப்பது இவர்கள் வேலை. இடித்துத் தள்ளும் வேலையும், போக்குவரத்துப்பாதை பந்தோபஸ்தும் இவர்கள் பொறுப்பு.

### லாஜிஸ்டிக்ஸ்

வெகு முக்கியமான துறை. உணவு சப்ளை, போக்கு வரத்துப் பாதை ஆகியவை இத்துறையின் பொறுப்பு.

### பெட்ரோல்

எதிரியைப் பற்றிய தகவல் சேகரித்து வரவும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவும் அனுப்பப்படும் ராணுவ கோஷ்டி.

## ஆயுதங்கள்

### மார்டர்

ஒரு புறம் அடைத்துள்ள பெரிய இரும்புக் குழாய். மறு புறம் வாய் திறந்திருக்கும் மூடி இருக்கும் பக்கத்தை தரையில் பிணைத்து விடுவார்கள். இரு காலி ஒன்றில் இந்தக் குழாயின் திறந்த வாய் மேலே இருக்கும் படி பொருத்தப்படும். ஒரு மார்டர் வெடிகுண்டு திறந்த வாய் வழியாக இதில் உள்ளே போடப்படும். குண்டு அடியில் போய் ஒரு முனையின் மீது தாக்கி வேகத்துடன் வெளியே எழும்பிச் செல்லும். அப்படிச் செல்லும் பொழுது வளைவாக சென்று இலக்கிற்கு அருகில் தரையில் மோதி குண்டு வெடிக்கும். இரு காலியைக் கொண்டு தூரத்தை நிர்ணயித்துக்கொண்டு விடலாம். ஆதலால் தொடர்ந்து இதிலிருந்து வெடிகுண்டுகளை அனுப்ப முடியும்.

காலாட் படையிடம் லேசான மார்டர்தான் இருக்கும்.

### மிஷின் பீரங்கி

இவை இரண்டு வகை, நடுத்தர பீரங்கி, லேசான பீரங்கி, பீரங்கி மருந்து கொண்டு நெடுந் தூரத்தில் இடைவிடாது இவை தீயை எழுப்ப இயலும்.

லேசான மிஷின் பீரங்கியைத் தூக்கிச் செல்ல முடியும். இடுப்பில் வைத்துக்கொண்டே சுடலாம்.

### சப்-மிஷின்கள்

லேசான மிஷின் பீரங்கி வகையைச் சேர்ந்தது. ஆனால் இன்னும் சிறியது. வனயுத்தத்திற்கும் நெருங்கி யுத்தம் செய்வதற்கும் இது மிகவும் பயன்படும்.

### ரைபிள்

சிப்பாயின் கைத்துப்பாக்கி இதில் தானாகத் தோட்டாவை நிரப்பிக் கொள்ளும் வகை உண்டு. அவ்வகையாக இல்லாவிட்டால் தோட்டா தீர்ந்தவுடன் சிப்பாய் அவ்வப்பொழுது போட்டு நிரப்பிக்கொள்ள வேண்டும்.

### கிரெனேட் (கைகுண்டு)

கோழி முட்டை வடிவத்தில் கிரிக்கெட் பந்தளவுக்குள்ள வெடி குண்டு இது. வெடித்தவுடன் செதில் செதிலாகப் பிரியும். மிகவும் கொடூரமானது. இதைக் கையால் எறியலாம். ரைபிளிலிருந்தும் சுக்க விடலாம்.

### பசூகா

இருபுறமும் திறந்த குழாய் ராக்கெட் கணைமுறைக்குப் பயன் பயன்படுவது;

—"நவஇந்தியா"

## அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழி ஆராய்ச்சி! சொற்பொழிவாற்ற செக். நாட்டு கமில்சுவலபிலுக்கு அழைப்பு

அமெரிக்காவில் உள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தில் திராவிட மொழி யாராய்ச்சி எனும் பொருள் பற்றிய சொற்பொழிவாற்ற செக்கோஸ்லோவேகிய தமிழ் ஆராய்ச்சித்துறை, வல்லுநர் கமில் சுமிலபில் அழைக்கப்பட்டிருக்கிறார்.

செக்கோஸ்லோவேகியாவிலுள்ள மொழியாராய்ச்சித் துறை விஞ்ஞானத் துறையில் பணியாற்றும் கமில் சுவலபின் திராவிட மொழிகளை நன்கு பயின்றவர். ஆராய்ச்சிகள் செய்து வருபவர். தமிழிலுள்ள பல சிறுகதைகளை அவர் செக் நாட்டு மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்.

ஐம்பெருங் காப்பியங்களில் தலை சிறந்ததான 'சிலப்பதிகாரத்தை 'செக்' மொழியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்திருக் வருகிறார்.

தமிழ் பண்பாட்டுத் துறையில் இவர் ஆழமான ஆராய்ச்சி செய்தவர். சென்னை கலாச்சார கழகத்தில் முதன் முதலாக தேர்ந்தெடுக்கப் பட்ட அந்நிய நாட்டு விஞ்ஞானி இவர் தான்.

இவருடைய செக் நாட்டுப் பெயரின் ஒரு பகுதி மொழி பெயர்ப்பான 'கிரம்பிய அழகிய தமிழ்' என்னும் தமிழ்ப் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்.

# செய்திச் சுருள்

**ஏ....அப்பா!**

**எவ்வளவு வேகம்!!**

உலகத்தின் மக்கள் தொகை ஒரு தலை முறைக்குள் 38 சதவிகிதம் அதிகமாயுள்ளது.

இந்தத் தகவலை ஐ. நா. வின் 1964 குடியாட்சி முறை நூல் வெளியிட்டுள்ளது.

மொத்த மக்கள் தொகை 316 கோடி.

மக்கள் தொகையில் பாதிக்கு மேல் ஆசியாவில் மட்டும் அதிகமாகியுள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 41 பேர் இருந்த இடத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது 63 பேர்கள் இருக்கிறார்கள்.

இந்தியா, இலங்கை, கம்போடியா, மேல் வோல்டா ஆகிய நான்கு நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் பெண்கள் ஆண்களை விட நீண்ட நாட்கள் உயிர் வாழ்கிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள பெண் குழந்தைகள் 73 ஆண்டுகள் உயிர் வாழ்வார்கள் என்றும் ஆண் குழந்தைகள் 67 ஆண்டு

கள்-உயிர் வாழ்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்தியாவின் ஆண்கள் 42 ஆண்டுகளும், பெண் குழந்தைகள் 41 ஆண்டுகளும் உயிர் வாழ்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கிராமத்திலுள்ள குழந்தைகளில்
## மூன்றில் ஒரு பகுதியினர் பள்ளிக்குச் செல்லுவதில்லை!

கிராமப் பகுதியிலுள்ள சிறுவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இன்னும் பள்ளிகளுக்குச் செல்லாமலிருக்கின்றனர்.

திட்டக் குழு நியமித்த ஒரு தனிக்குழு நாட்டு நிலையை ஆராய்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது,

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

ஒரு சில பள்ளிகளிலேயே விளையாட்டு மைதானம், தோட்டம் போன்றவைகள் இருக்கின்றன. அதிலும் மிகக் குறைவான அளவில்தான் குடிநீர் வசதியும், கக்கூஸ் வசதியும் இருக்கின்றன.

போதனைக்கு உதவும் கருவி (வரைபடம். கரும்பலகை போன்றவை) மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றன. சில பள்ளிகளில் அறவே இவை இல்லை.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாததற்குக் காரணம் குடும்பங்களிலுள்ள பொருளாதாரப் பற்றுக்குறையே,

பாடங்கள் பலகாரணங்களால் விட்டு விட்டுப் போதிக்கப்படுவதால் பல பள்ளிகளில் மாணவர் சரிவரத் தேர்வடைவதில்லை.

1960-61-ல் 23 சதவிகிதமுள்ள மாணவர்கள் தங்கள் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விட்டனர். இதற்குக் காரணம் வீட்டில் வசதிக் குறைவும்—படிப்பில் நாட்டம் இல்லாமையுமேயாகும்.

மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் சம்பளச் சலுகைகள் மொத்த மாணவர்களில் 14 சதவிகிதத்தினருக்கே தரப்படுகிறது. சீருடை 9 சதவிகிதத்தினருக்கே தரப்படுகிறது.

1947—லிருந்து 61 வரை கிராமப் புறங்களில் பள்ளிகள் அதிகம் ஏற்பட்டிருந்தும் பெண் குழந்தைகள் அதிகமாகப் பள்ளியில் படிப்பதில்லை.

1947–ல் மாணவிகள் மொத்த பள்ளி மாணவர் எண்ணிக்கையில் 36·3 சதவிகிதமே இருந்தனர். 1961–லும் அதே சதவிகிதத்தில் இருக்கின்றனர்.

நிலமில்லாத உழவர்களின் குடும்பத்திலிருந்து 42 சதவிகித குழந்தைகள் பள்ளி செல்கின்றன.

இந்தப் பள்ளி விவரங்கள் இந்தியா முழுமையும் 15 மாநிலங்களிலுள்ள கிராமங்களிலிருந்து சேகரிக்கப் பட்டவை.

## இந்தியா அணுகுண்டு தயாரிக்குமா? இவ்வாண்டு இறுதிக்குள் முடிவு தெரியலாம்!

"அணுகுண்டு தயாரிக்க இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு செய்யப்பட்டுவிடும்" என்று இந்திய உயர் விஞ்ஞானிகள் கருத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியா அணுகுண்டு செய்ய வேண்டும் என கோரிக்கை ஒரு புறம் உள்நாட்டில் வலுத்துக் கொண்டிருக்க. எல்லைக்கு அப்பால் இருந்து எந்த நிமிடமும் தாக்குதல் தொடங்கப்படலாம் என்பது மற்றொரு புறமிருக்க, அணுகுண்டு பற்றிய இக்கட்டான நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, இந்த ஆண்டு முடிவுக்குள் அமைதிப் பணிக்கான அணுகுண்டு சோதனை நடத்த வேண்டுமென இந்திய முக்கிய அணுசக்தி விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அணுகுண்டு தயாரிப்பதற்குரிய எல்லா வித சாதனங்களும் இரசாயனப்பொருள்களும் இந்தியாவில் இருக்கின்றன. மிகவும் குறுகியகாலத்தில்இந்தியா அணுகுண்டு தயாரிப்பதற்குரிய வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன என்பதை சர்வதேச நிபுணர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இராஜஸ்தானில் அமைக்கப்படுகிற மிகப் பெரிய புரிடோனியம் உற்பத்தி நிலையம், 1967-ல் தயாராகி விடும்.

## ஆண்டொன்றுக்கு 30 அணுகுண்டுகள்

டிராம்பேயில் உள்ள அணு உலையைவிட, இது 18 மடங்கு பெரியது. ஆண்டுக்கு 30 அணுகுண்டுகளைத் தயாரிக்கும் சக்தி வாய்ந்தது. டிராம்வேயில் அணுகுண்டு தயாரிக்க விரும்பினால் ஆண்டுக்கு இரு அணுகுண்டுகளே தயாரிக்க முடியும். ஆனால் டிராம்பே அணுஉலை, சமாதான காரியங்களுக்கே பயன் படுத்தப் படும் என உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. மாஸ்கோவில் அணுகுண்டு சோதனைத்தடை உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டதும், அமைதிப் பணிக்காக அணுசோதனை நடத்துவதை தடை செய்யாது என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், கல்பாக்கம் அணு உலை நிலையம் எவ்வித சர்வதேசக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் அமைக்கப்படவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய விஞ்ஞானிகளே முழுக்க முழுக்க வடிவமைத்து, நிறுவ இருக்கிறார்கள்.

"இந்தியா அணுகுண்டு தயாரிக்க வேண்டும்" என்ற கோரிக்கை உள்நாட்டில் வலுத்து வருகிறது. நாட்டின் எல்லையில் நிகழ்கிற நிகழ்ச்சிகளைப் பொறுத்து, அணு ஆயுதச் சோதனை நடத்துவது பற்றிய முடிவு இந்த ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்டுவிடும் எனக் கூறப்படுகிறது.

(யு. என. ஐ.)

# வீர காவியத்தில்

வையகத்தார் வியந்து போற்றத்தக்க வகையில் வீரச் செயல்கள் பல புரிந்து—புதியதோர் புறநானூறு சமைத்த நமது இராணுவத்தைச் சேர்ந்த—விமான அதிகாரி யொருவர் பெயர். பி. டி. சினாய்-எதிரிகளால் தாக்குண்ட தமது விமானத்திலேயிருந்து தப்பி அன்னிய மண்ணிலேயே விழுந்தும்—அங்கிருந்து நெஞ்சுரத்தோடு நமது மண்ணுக்கு வந்த கதை இது:

அவரே சொல்கிறார் :

எனக்கு உயிருள்ளவரை 1965 செப்டம்பர் 10-ஆம் தேதியை மறக்கவே மாட்டேன்.

அன்று பகலில் பாகிஸ்தான் பகுதியைத் தாக்குவதற்காக நானும் என்னுடைய தோழர்களும் 3 விமானங்களில் புறப்பட்டோம். இலக்கை அடைந்தவுடன் நோட்டம் பார்ப்பதற்காக நாங்கள் தாழப் பறந்தபோது, என் விமானத்தில் திடீரென்று ஓர் அதிர்ச்சி ஏற்பட்டதை உணர்ந்தேன்.

எதிரியின் விமான எதிர்ப்பு பீரங்கி என் விமானத்தைத் தாக்கிவிட்டது என்பதை நான் தெரிந்து கொண்டேன். நான் உட்கார்ந்த இடத்தில் புகைசூழ்ந்து கொண்டது. உடனே எங்கள் குழுவின் தலைவருக்கு வயர்லெஸ் மூலம் விவரம் அறிவித்தேன்.

விமானத்தை உடனே கிழக்குநோக்கிச் செலுத்தி பாகிஸ்தானியப் பகுதியிலிருந்து வெளியேறிவிடுமாறு அவர் பணித்தார். இதற்குள் என் விமானத்தில் மின்சார உற்பத்தி நின்றுபோயிற்று. வானொலித் தொலைபேசி வசதியும் அற்றுப் போயிற்று. இதனால் எனக்கும் வெளி உலகத்துக்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. புகை ஓரே யடியாக மண்டிவிட்டதால் என்னால் எதிரே எதையும் பார்க்கமுடியவில்லை. சுவாசிப்பதுகூட கடினமாகிவிட்டது. இனிமேல் விமானத்தில் தங்குவது ஆபத்து என்று கண்டு நான் கீழே குதிப்பதற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தேன்.

எனக்கு உயரே இருந்த மூடியை நான் விலக்கியபோது சுத்தக்காற்று உள்ளே வந்து, புகை சற்றே நீங்கியது. மீட்டரில் பார்த்தபோது நான் 3000 அடி உயரத்தில் இருப்பதையும், விமானத்தின் வேகம் மிகமிகக் குறைந்து விட்டதையும் தெரிந்துகொண்டேன். இனி விமானம் சீக்கிரமே விழுந்து நொறுங்கி விடும் என்பதை உணர்ந்து நான் விமானத்திலிருந்து பாராசூட் மூலம் குதித்தேன்.

நான் இறங்கிக் கொண்டிருந்த போது நிலத்திலிருந்து புகைவர்

என்னை நோக்கிச் சுட்டார்கள். நல்ல வேளையாக நான் ஆபத்தின்றி தரையில் இறங்கிவிட்டேன் தரையிலிறங்கியவுடன் முதல் வேலையாக பாராசூட்டையும், மற்றச் சுமைகளையும் என்முதுகிலிருந்து அகற்றிவிட்டு, உயரமாய் வளர்ந்திருந்த புல்லுக்குள் ஒளிந்து கொண்டேன். சூரியன் இருந்த திசையை வைத்துக்கொண்டு நான் மறைந்த நிலையிலேயே வடக்கு நோக்கி நகர ஆரம்பித்தேன்.

பீரங்கிச் சத்தம் வர வர மங்கியதால் நான் பீரங்கி நிலையிலிருந்து விலகிச் சென்று கொண்டிருந்ததைத் தெரிந்து கொண்டேன். ஓரிடத்தில் சற்று நின்று என்னிடமிருந்த ரகசிய தஸ்தாவேஜுகள் அனைத்தையும் சிகரெட்லைட்டரால் எரித்துச் சாம்பலாக்கினேன். பகைவர் பிராந்தியத்தை விட்டு வெளியேறுவதற்கு உதவியாக குறிப்புப் படத்தை மட்டும் என்னிடம் வைத்துக்கொண்டேன். காகிதங்களை எரித்தபோது மீண்டும் துப்பாக்கிச் சத்தம் மிக அருகே கேட்கவே நான் மறுபடி ஓட ஆரம்பித்தேன்.

உயர்ந்து வளர்ந்திருந்த புல்லுக்கு ஊடேயே ஓடியும் நடந்தும் வெகு தூரத்தைக் கடந்து ஒரு கிராமத்தை அடைந்தேன். அங்கே பயிருக்கு நடுவில் நான் ஒளிந்து கொண்டபோது, மிக அருகே ஒரு கிராமவாசி நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

நல்ல வேளையாக அவர் நகர்ந்து சென்றபிறகு நான் இருட்டும் வரைக் காத்திருக்க நிச்சயித்தேன். இருட்டியவுடன் நான் என் உடையிலிருந்து பளபளப்பான பொருள்கள் அனைத்தையும் களைந்துவிட்டு, முகத்திலும் கைகளிலும் சேற்றைப் பூசிக்கொண்டேன்.

இதற்குள் சந்திரன் உதயமாகிவிட்டது. சந்திரனை நோக்கியே கிழக்குத்திசையில் நகர ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட 5 மணி நேரம் நடந்தும், ஓடியும் பல கிராமங்களைக் கடந்தேன். வழியில் மனிதர்கள் பார்வையிலிருந்து தப்புவதோடு, நாய்களின் கவனத்திலிருந்து விலகுவதும் மிகக் கடினமாய் இருந்தது.

நடுநடுவே நீர்நிலைகளைக் கடக்கவேண்டிவந்தது. 5 மணி நேர அவதிக்குப் பிறகு ஒரு முக்கியமான பாதையைஅடைந்தேன் அந்தப்பாதை அமிருதசரசுக்குச் செல்லும் சாலையாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டேன்.

அந்தச்சாலை வழியாகவே மிகவும் எச்சரிக்கையாக நகர்ந்து

---

# வெற்றித் துளிகள்!

சென்று கொண்டிருந்தபோது வழியில் ஒரு கிணறு இருந்ததைக் கண்டேன். கிட்டத்தட்ட ஒரு வாளி நிறையத் தண்ணீர் குடித்திருப்பேன்; அவ்வளவு தூரத்துக்கு என்னை தாகம் வாட்டியிருந்தது.

கிணற்றுக்கருகே ஓய்வுக்காக நான் சற்று உட்கார்ந்திருந்த போது சாலையின் மறுபுறத்தில் சத்தம் கேட்டு திடுக்கிட்டேன். ஆனால் அதுவரை நான்கடந்திருந்த தூரத்தைக் கணக்கில் கொண்டு பார்த்தபோது நான் இந்தியப் பகுதியில்தான் அப்போது இருக்க வேண்டும் என்று அந்தச் சத்தம் நமது துருப்புகளிடமிருந்தே வந்திருக்கவேண்டும் என்றும் ஊகித்தேன்.

சற்று கூர்ந்து கேட்ட போது தென்னாட்டு மொழியில் அவர்கள் பேசியது தெரிந்தது. அதிலிருந்து அவர்கள் பாகிஸ்தானியராய் இருக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்டேன்.

இதற்கப்புறம் நான் நேரடியாக அந்த வீரர்களிடம் சென்று என் கதையைச் சொன்னேன். அவர்கள் முதலில் நம்பவில்லை.

ஆனால் 2—மணி நேரம் இடைவிடாமல் விசாரித்த பின் என்னை நம்பியதுடன் அவர்கள் எனக்கு உணவு கொடுத்தார்கள். பிறகு என்னை ஒரு ஜீப்பில் ஏற்றி தமது அதிகாரியிடம் அனுப்பினார்கள்.

சில மணி நேரம்தான் என்றாலும், சோதனையும் பதற்றமும் தீவிரமாய் இருந்ததால் நான் சற்று நேரத்திலேயே அயர்ந்து தூங்கிவிட்டேன். பாதுகாப்பான இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம் என்ற உணர்வால்தான் எனக்குத் தூக்கம் வந்திருக்க வேண்டும். நான் மறுபடி விழித்த போது என்னைச் சுற்றி நண்பர்களே காணப்பட்டார்கள்.

நான் மறுபடி சண்டைக்கு ஆயத்தமானேன்.

ராஜஸ்தானத்து பார்மர் மாவட்ட அம்தாலா தாசிலேச் சேர்ந்த சிங்கார் சிங், இந்திய சிப்பாயாவார். துடிக்கும் வீரத்திற்குச் சிறந்த ஓர் உதாரணமாக இப்போது இவர் மாறியிருக்கிறார்.

அவர் தன் கடமையை ஆற்றிக் கொண்டிருக்கையில் திடீரென எட்டுப்பேர் வளைத்துக் கொண்டனர். அவர்கள் அத்தனைப் பேரும் பாகிஸ்தானத்து ஊடுருவல் பிடாரிகள்.

வேறென்ன செய்வது! கையிலிருந்த துப்பாக்கியால் பட பட வெனச் சுட்டார் சிங்கார் சிங்.

நான்கு ஊடுருவல் பிடாரிகள் கொல்லப்பட்டனர்! இருவர் படுமோசமாகக் காயப்பட்டனர்! இரு பிடாரிகள் பிடரியில் கால்பட ஓடி ஒளிந்தனர்!

இச்சண்டையில் சிங்கர் சிங்குக்கும் காயம் ஏற்படத்தான் செய்தது. என்றாலும் பார்மர் மருத்துவ மனையில் சிவ்விரைந்து குணம் பெற்று வருகிறார்.

## தாயின் வீரம்

இது ஒரு தாயின் கதை. ஒரே ஒரு மகனையும் போருக்கனுப்பி விட்டு, கணவரோடு சாமிநாத புரம் என்ற ஊரில் வாழ்ந்து வந்த முஸ்லிம் தாயின் கதை!

ஒரே ஒரு மகன்தான் அந்த அன்னைக்கு! அவனோ காஷ்மீர் முனையில் பாக் வெறியர்களோடு போராடிக் கொண்டிருக்கிறான்! வீட்டிலோ அவனைப்பெற்ற தந்தை சாவோடு போராடினார். கடைசியில் இறந்தே விட்டார்.

இந்த நேரத்தில் தந்தை இறந்து விட்டதை மகனுக்கு அறிவிப்பதா? இல்லை! கூடாதா? விதவையாகிவிட்ட தாய் ஜைர் பாய் மருகினாள்.

"தந்தை இறந்துவிட்டார் என்று இந்நேரத்தில் செய்தி கிடைத்தால், அது அவனை வருத்தும். நாட்டைக் காக்கும் பணியிலிருந்து அவன் கவனத் தைத் திருப்பும்! எனவே, சாவுச் செய்தியை அனுப்பக் கூடாது!" என்று இருந்து விட்டாள் அந்தத் தாய்!

கணவனை இழந்த ஜைர்பாய், கோவை மாவட்ட ஆசிரியர் சங் கப் பாதுகாப்பு நலப் பிரிவுச் செயலாளரிடம் உதவிகோரி, மடல் விடுத்தார் அதில் தான் இச் சோகத் தகவல் வெளியாகி யுள்ளது என. யு. என். ஐ தெரி விக்கிறது.

சாமிநாதபுரம் கோவையி லிருந்து, 60 மைல் தொலைவில் உள்ளது.

## வீர தியாகம்

இந்திய படையிலுள்ள இளம் வீரர்களின் தீரத்திற் கோர் இலக்கணமாய்த் திகழ்பவர் தியாகி.

முப்பது வயதுகூட நிரம்பாத வர் அவர். மேஜர் பட்டம் பெற் றவர் இச்சோகில் கால்வாய்ப் பகுதியிலுள்ள தோக்ரியைக் கைப்பற்றும் பணி அவருக்குத் தரப்பட்டது.

அவர் தமது படையினருடன் தோக்ரியை நோக்கி முன்னே றிக்கொண்டிருந்தார். எதிரிகள் அதைப் பார்த்துவிட்டனர். இரண்டு தடவை தியாகியின் உடலில் குண்டு பாய்ந்தது. பல மான காயம் ஏற்பட்டது; அந்தக் காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டே வந்தது.

இருந்தும், அவர் முன்னேறி னார், தமது இலக்கை நோக்கி! எதிரியின் டாங்கு ஒன்றை முடமாக்கினார்.

மூன்றாவது குண்டும் அவர் பேரில் பாய்ந்தது. ஆனால் அவர் முன்னேற்றத்தை எந்தக் குண்டு மாரியும் தடுக்க முடியவில்லை. மேலும் இரண்டு டாங்கிகளை அவர் உடைத்தெறிந்தார்.

எதிரிகளின் அரண்களைத் தாக்கித் தகர்த்தபடியே முன் னேறினார். தியாகி இரண்டு குண்டுகளின் பாய்ச்சலுக்குப் பிறகு தியாகியால் நகரக்கூட முடியவில்லை. இருப்பினும் அவரது படை வெற்றிக் கொடி நாட்டியது.

குண்டுகளால் துளைக்கப்பட்டு

தியாகி, ராணுவ மருத்துவ மனையில் உயிர் துறந்தார்.

அவரது படைத் தலைவர் அவரைப் பற்றிக் கடைசியாகக் கூறினர். "ஈடு இணையற்ற அதிகாரிகளில் ஒருவரை இந்தியா இழந்தது!;

## நிலைக்கும் வீரம்

காஷ்மீர் பள்ளத்தாக்கிற்குள் ஊடுருவி வந்திருக்கும் பாகிஸ்தானியரை ஒழிப்பதில் நமது படையினர் காட்டிய போற்றத்தக்க வீரம் பற்றிய விவரங்கள் மேலும் வந்துகொண்டிருக்கின்றன.

சிரீநகரின் சுற்றுப்புறத்தில் ஓரிடத்தில் ஊடுருவியிருந்த பகைவர்களை ஒழிப்பதற்கென நமது இராணுவத்தின் அணி ஒன்று அனுப்பப்பட்டது. இந்த நடவடிக்கை நிறைவேறுவதற்கு நமது படையினர் அடர்த்தியான காடுகள் மூலமும், மலைகள் கணவாய்கள் ஆகியவற்றைக் கடந்தும் செல்லவேண்டியிருந்தது.

ஒரு கணவாயைத் தாண்டி நமது படைகள் சென்றுகொண்டிருந்தபோது, காட்டிலிருந்து பகை வெறியர்கள் கடுமையாகச் சுட ஆரம்பித்தார்கள். அணியின் தலைவர் இந்தத் தாக்குதலில் காயமடைந்தார்.

அணியிலிருந்த இளம் அதிகாரி ஒருவர் உடனே தலைவரைப் பாதுகாப்பான ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு, சாதாரண வகை இயந்திரத் துப்பாக்கி ஒன்றுடன் முன்னேறிப் பகைவரைக் கடுமையாகத் தாக்க ஆரம்பித்தார்.

இந்த நடவடிக்கையில் அவர் மேல் மூன்று தடவை பகைவரின் தோட்டாக்கள் தாக்கின. தமக்கு ஏற்பட்ட காயங்களையும் பொருட்படுத்தாமல் அந்த இளம் அதிகாரி விடாமல் சுட்டுப் பகைவரை ஓய வைத்தார். இதன் மூலம் நமது படைஅணி முன்னேறிச் செல்ல முடிந்தது.

அந்த இளம் அதிகாரியை ஒரு ஸ்டிரச்சரில் சுமந்துசெல்ல நேரிட்டது. அப்போதும் கூட அவர் தமது துருப்புக்களை ஸ்ட்ரெச்சரில் இருந்தவாறே தலைமை தாங்கி நடத்திச்சென்றார். இறுதியில் இந்தக் காயங்களால் அவர் இறந்து விட்டார். என்றாலும் தமது பணியை அவர் செவ்வனே நிறைவேற்றிய பிறகுதான் அவர் தம் ஆவி பிரிந்தது. இந்த அணியின் நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் ஆயுதமேந்திய பகைவர் எவருமில்லாமல் தொலைக்க முடிந்தது.

இந்த இளம் அதிகாரியின் தீரச் செயலும் தலைமைச் சிறப்பும் என்றென்றும் நிலைத்திருக்குமென்று அவருடன் பணியாற்றிய அதிகாரிகள் சொல்கிறார்கள்.

## வெற்றி முனை ?

எதிரி எந்த இடத்திலிருந்து சுடுகிறான் என்று கண்டறிய, இந்திய வீரன் ஒருவன் மரமொன்றின் உச்சியிலேயே நான்கு நாளிருந்த தீரச் செயல் இப்போது தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானியப் பிடாரிகள் ஓர் இடத்திலிருந்து தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் இருக்கும் இடம் இந்தியப் படைக்குத் தெரியவில்லை. எனவே இந்த வீரனை அனுப்பினார்கள். அவன் கம்பியில்லாத் தந்தி இயந்திரத்தோடு மரம் மான்றின் உச்சிக்கு ஏறினான். நான்கு நாட்கள் தொடர்ந்து அப்படியே இருந்து துப்பறிந்தான். கடைசியில் எதிரி எந்த இடத்திலிருந்து சுடுகிறார்கள் எனக் கண்டறிந்தான்.

பின், எப்படி எதிரியின் இடத்திற்குப் போவதென்று கம்பியில்லாத் தந்தி மூலம் செய்தி அனுப்பி, இந்தியப் படையைப் போகச் செய்தான்.

வெற்றி கிடைத்தது.

---

## ஐ. நா. சபையும்....

20-ம் தொடர்ச்சி

"ஐயுறுவோரும் குறை கூறுவோரும் மீண்டும் ஒரு முறை தோல்வியடையும்படி, ஐ. நா. முடிவாக அமைதி செய்து வைக்கும் தன் நிலையை நிறுவிக் காட்டியுள்ளது. அநாவசியமான இரத்தக் களரியை நிறுத்துவதற்கு இன்றியமையாத முக்கியமான உதவியை, ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரே உதவியை, மீண்டும் ஒரு முறை ஐ. நா. வே அளித்துள்ளது."

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்


# புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

# தூக்கமே, நீ வாழ்க!

கரு: லே ஹன்ட்

உரு: நா. ஆறுமுகம், எம்.ஏ

தூக்கம்! எப்படிப்பட்ட இன்பமான சாதனம் மனிதனுக்கு. மெத்தென்ற படுக்கைக்குப் போகுமுன் அந்த இனிய நினைப்புடனேயே வியர்வையில் நனைந்திருக்கும் சட்டையைக் கழற்றும் போதும் நதியில் விளையாடி கொடியில் தலைசீவி வரும் சில்லென்ற தென்றற் காற்று உடலை வருடும் போதும் எவ்வளவு அமைதி; நிறைவு!

உண்மையிலேயே தூக்கத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவன் சிறந்த அறிஞனாகத்தான் இருக்க வேண்டும். அவன் வாழ்க! ஓய்ச்சல் ஒழிவு இன்றிக் கடிகாரத்தைப் போல நாள் முழுவதும் உழைத்துக் கொண்டிருக்கும் மனிதனுக்குத் தூக்கம் சிறந்த விடுதலையல்லவா? அழகான படுக்கையில் இருந்து மெள்ள மெள்ள கண்ணுறங்கப் போகிறோம் என்பதே ஓர் இன்பமான நினைப்பு. நாள் முழுவதும் நெற்றி வியர்வையை நிலத்தில் விழச் செய்த உழைப்பு முடிந்து தூங்கப் போகும்போது நம்முடைய உணர்வு நிலை சிறிது சிறிதாக நம்மைவிட்டு நீங்குகிறது. பால் நினைந்து ஊட்டிய தாய் உறங்கப்பண்ணிய குழந்தையின் தளிர் உடலிலிருந்து தன்னுடைய கையை மெள்ள மெள்ள விலக்கிக் கொள்வதைப் போல உணர்வு நிலை நம்மிடமிருந்து விடுதலை பெற்றுக்கொள்கிறது. மனம் மௌன நிலையை அடைகிறது. விழிகளின் இமைகள் மூடத் தொடங்குகின்றன—மூடுகின்றன — மூடிக்கொண்டன. இப்போதிருப்பது நம்மை மறந்த ஒரே ஏகாந்த நிலைதான்!

நடு இரவுக்கு முன்னால் உறங்குவதே நல்லது; இயற்கையன்னை தன்னுடைய செறிந்த இருட்டினாலும் குளிர்ந்த காற்றினாலும் இதை நமக்கு அறிவுறுத்துகிறாள். மேலும் பின்னிரவுத் தூக்கம் நம் நீண்ட வாழ்நாளின் வழியடைக்கும் கல்லாக அமைந்து விடுகிறது என்பர் அறிஞர். முன் இரவுத் தூக்கம் களைப்பைப் போக்கிக் களிமகிழ்ச்சியையும் தெளிவையும் உண்டாக்குகிறது. 'அதிகாலையில் எழு' என்பது பொருள் பொதிந்த மொழியன்றோ?

இரவுக்காவல், காவலாட்கள், மூளை வேலையுள்ள சிந்தனையாளர்கள், முதலியோர்களைத் தவிர சாதாரணமானவர்களுக்குப் பின்னிரவில் உறங்கப் போவது நன்மையைத் தராது. உடலின் வலிமையையும் பொலிவையும் அழிப்பதோடு உழைப்பின் பகல் நேரத்தையும் வீணாக்கும். ஆகவே முன்னிரவில் கண்விழித்துப் பின்னிரவில் உறங்கப்

போவதில் கவனமாக இருக்க வேண்டும்.

பகலிலும் சிலர் உணவு உண்ட பிறகு தூங்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்தத் தூக்கம் ஆழ்ந்த தூக்கமாக அமையாமல் கோழித் தூக்கமாகவே (அரைத் தூக்கமாகவே) அமைந்துவிடுவதைப் பார்க்கலாம். பகல் தூக்கம் முன்னிரவுத் தூக்கத்துக்கு இடையூறாக அமைந்து உடல் நலக்குறைவுக்கு வழியேற்படுத்துகிறது. ஆகவே வயோதிகர்கள், நோயாளிகள், உடல் வலிமையற்றவர்கள் ஆகியோரைத் தவிர மற்றவர்களுக்குப் பகலில் தூங்கும் உரிமையை இயற்கை கொடுக்கவில்லை.

உடல் நலக் குறைவானவர்கள் பகல் தூக்கத்தினால் புத்துணர்ச்சி பெறக்கூடும். அவர்களின் உடல் நிலை அதற்குத் துணையாக இருக்கலாம். கண் விழித்துக் கொண்டிருப்பதில் தான் உடல் நலம் இருக்கிறது என்று நினைக்க வேண்டியதில்லை. துயரம் சில நேரங்களில் மனிதர்களைத் தூங்கவைக்கிறது. சில வேளைகளில் தூக்கத்தைக்கெடுக்கவும் துணை நிற்கிறது. அது, அவரவர்களுடைய மனப் போக்கைப் பொறுத்திருக்கிறது. எனினும் மிகுதியான துயரம் வரும்போது உண்டாகும் மூர்ச்சையாகும் நிலையைத் தவிர பெரும்பான்மையோருக்குத் துயரக் கடலை நீந்திக் கரையேறுவதற்கு இயற்கையின் தப்பாத தெப்பமாகவே தூக்கம் துணை செய்கிறது எனலாம். மஞ்சள் காமாலை நோயுள்ளவன் பகலில் படுத்து நன்றாகத் தூங்குகிறான். ஆனால் வேறு சில நோயாளிகள் தொடர்ந்து பல இரவுகள் உறக்கம் இல்லாமல் இருந்தாலும் பகலில் இமையோடு இமை மூட மறுப்பதைப் பார்க்கிறோம். இரவில் நன்றாகத் தூங்கிப் பெறுகின்ற சுகமே மறுநாளின் உழைப்புக்கு வேண்டிய முயற்சியையும் வலிமையையும் தருகிறது.

கோடைக் காலத்தில் வெட்டவெளி வயற்பரப்பில் பகல் நேரத்தில் கொள்ளும் தூக்கம் முழுமையும் வளமையும் கொண்டதாகும். கற்றோரின் நெஞ்சம் போன்று தூய்மையான நீல விதானத்தின் கீழ், பச்சைப் பசேலென்ற கம்பளம் விரித்தாற்போன்ற நெல் வயல்களுக்கிடையில், வெயிலை மறைத்திருக்கும் தண்ணிழலைத் தரும் தென்னைமரச் சூழலில், மெத்தென்ற புல் தரையில் தென்னை இளங்கீற்றினில் சதிராடும் மெல்லிய தென்றற் காற்றின் இதமான கிளுகிளுப்புடன் கொள்ளும் உறக்கத்தின் இன்பத்தை எப்படியெடுத்தியம்புவது? வானத்துக் கணவனும் நிலமகளும் படைத்தளித்த வண்ணச் சூழலுக்கு எல்லைதான் உண்டோ? இயற்கையின் எளிய இனிய அழகின் சிரிப்பே வையகத்தின் வண்ணக்கோலம்! இயற்கையின் எழிலுக்கும் தூக்கத்துக்கும் இடையில் யார் காண் நிற்க முடியும்?

கோடைக்கால பகல் தூக்கத்துக்கு அடுத்த நிலையில் மனிதனுக்கு இன்பந் தருவது, நீண்ட நெடிய உழைப்புக்குப் பிறகு களைப்பான நிலையில் உறக்கத்துக்காகப் படுக்கைக்குச் செல்லு முன் உட்கார்ந்திருந்த நிலையிலேயே கொள்ளும் தூக்கமே—தூங்கிவிடுவதே—என்று கூறலாம். இதன் சிறப்புதான் என்ன? தூக்கம் வருவது நன்றாகத் தெரியும்; ஆனால் எழுந்து சென்று உடனே படுக்கையில் படுக்க வேண்டும் என்பது புரியும்; ஆனால் எழுந்து செல்ல சோம்பலாயிருக்கும். அப்போது சில நேரங்களில் நாற்காலியில் களைப்பைப் போக்க உட்கார்ந்த நிலையில் தூங்கி விழுந்து கொண்டே இன்பத்தை அனுபவிப்போம். இந்த நிலையில் அதிகமாகத் தலை சில நேரங்களில் ஆடுவது தூக்க இன்பத்தைக் கெடுக்கும். அந்த இன்பத்தை விட்டு விட நமக்கு விருப்பம் இராது. உடனே நாற்காலியின் முன்னால் சிறிது நகர்ந்து உட்கார்ந்துகொண்டு தலையை நாற்காலியின் பின்னால் மல்லாந்த நிலையில் சாய்த்துக் கொண்டு, கால்களை எதிரேயுள்ள மேசையின் மீதோ அல்லது மற்றொரு நாற்காலியின் மீதோ போட்டுக்கொண்டு பாதிப் படுத்த நிலையில் அரிதுயில் கொள்ளுவோம்! எவ்வளவு நேரம் இப்படிப்பட்ட வசதியற்ற நிலையில் இருப்பது; மிகவும் சங்கடந்தான்! என்றாலும் இந்த நிலையிலிருந்து எழுந்து சென்று படுக்கையில் நன்றாகக் கால் நீட்டிப் படுக்கத் தோணுவதில்லை. ஏனென்றால் படுக்கச் செல்வதற்காக நடக்கும் முயற்சியில் சில வேளைகளில் வந்த தூக்கம் பறந்து போய்விடுமே!

இப்போது தூக்கத்தின் சில வேடிக்கையான பண்புகளைப் பார்ப்போம். காலத்தை வென்ற கவிஞர்கள் பலர் தூக்கத்தின் சிறப்பைப் போற்றியுள்ளனர். தூக்கம் ஒருவனுடைய உணர்ச்சிகளைச் சமநிலைப் படுத்தும் செங்கோலாக எப்போதும் விளங்குகிறது. விழித்துக் கொண்டிருக்கும்போது ஒருவன் எவ்வளவு கர்வத்துடனும் செல்வச் செருக்குடனும் இருக்கலாம். உண்ணும்போதும், உடுத்தும் போதும், நடக்கும்போதும் சாதாரண நிலையில் மற்றவர்களுடன் பழகும்போதும் ஒருவன் கர்வத்துடன் இருக்கலாம். ஆனால் தூக்கம் சிறந்த மந்திரவாதியைப் போல செயல்படுகிறது. மன்னவன் ஆனாலும், மாடோட்டும் சின்னவன் ஆனாலும் தூக்கம் அவர்களை சமநிலைப் படுத்துகிறது. கைகளையும், கால்களையும் விருப்பப்படி நீட்டிக்கொண்டு குறட்டையொலியோடு தூங்குவதில் ஏழைக்கும், பணக்காரனுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? படுக்கையின் தரத்தில் வேறுபாடு இருக்குமே தவிர கொள்ளும் உறக்க நிலையில் மாறுபாடு இருக்க முடியாது. பணக்காரனுக்குத்தான் குறட்டை வருமென்றோ ஏழைக்கு வராது என்றோ ஒரு முறையில்லை. உணர்க.

# 7 தமிழ் நாட்டு ஆசிரியர்கள் உள்பட 90 ஆசிரியர்களுக்கு விருது

## சமூகத்தில் ஆசிரியர்கள் நிலை உயர அமைச்சர் சாக்ளா யோசனை

*புது டில்லி, செப். 5—ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணனின் 77-வது பிறந்த நாளை இன்று நாடு முழுதும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டது.*

**வாழ்க்கை, செல்வம், அறிவுத் திறன், பேச்சு வன்மை ஆகியவை மூலம் எல்லோருக்கும் அதிகமான நன்மை புரிவதே உண்மையான குறிக்கோளாக விளங்க வேண்டுமென்று ஆசிரியர்கள், மாணவர்களுக்கு விடுத்துள்ள செய்தியில் ராஷ்டிரபதி கூறியிருக்கிறார்.**

ராஷ்டிரபதியின் பிறந்த நாளை யொட்டி நாடு முழுவதிலும் 90 ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. தமிழ் நாட்டைச் சேர்ந்த 7 ஆசிரியர்கள் இச் சிறப்பைப் பெற்றனர்.

### ராஷ்டிரபதி செய்தி

ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியின் வாசகம் வருமாறு:—

" ஆசிரியர்களின் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால் அவர்கள் தாம் உண்மையிலேயே நமது நாகரிகத்தின் அச்சாணியாக விளங்குகின்றனர். ஒழுங்கு கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தும் ஆர்வத்தைத் தங்கள் மாணவர்களிடையே வளர்ப்பதும், அவர்களுக்கு சேவா உணர்ச்சியை ஊட்டுவதும் ஆசிரியர்களின் கடமையாகும். ஆசிரியர்களுக்குத் தேவையான சாதாரண வசதிகளைக் கூட நாம் அளிக்க முடியாமல் இருந்து வருவது வேதனையளிக்கும் ஒரு அம்சமாகும். வருகிற வருடங்களில் இந்தக் கஷ்டங்கள் அகற்றப்பட்டு விடும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

நமது வாழ்க்கை, செல்வம், அறிவுத்திறன், பேச்சு ஆகியவை மூலம் எல்லாருக்கும் மிக அதிக நன்மை புரிவதே வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளாகும் என்பதை ஆசிரியர், மாணவர், ஆகிய இருவருமே நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

### திரு. சாக்ளா கோரிக்கை

சமூகத்தில் ஆசிரியர்களுக்கு நல்ல அந்தஸ்து அளிப்பதன் அவசியத்தை இன்று வெளியிட்டுள்ள செய்தியில் கல்வி மந்திரி திரு. எம். ஸி. சாக்ளா வற்புறுத்தியுள்ளார். தேசிய ஆசிரியர் நல நிதிக்குத் தாராளமாக நிதி வழங்கும்படி மக்களைக் கேட்டுக் கொள்கிறார்.

"ஆசிரியர்களுக்குச் சமூகம் அளிக்கும் மதிப்பையும், அந்தஸ்தையும் கொண்டே சமூகம் மதிக்கப்பட வேண்டும் இதை அளவு கோலாகக் கொண்டு பார்த்தால், நமது சமூகம் மிகவும் பிற்போக்கான தாகும்" என்று கூறினார் திரு சாக்ளா.

ஆசிரியர் தொழில் உன்னதமான தென்றாலும், இத் தொழிலில் முன்னேறுவதற்கான வருங்காலமோ, பாதுகாப்போ இல்லாததால் இளைஞர்கள், யுவதிகள் ஆசிரியர் தொழிலுக்கு வர அஞ்சுவதை எடுத்துக்காட்டினர்.

திறமைசாலிகள் ஆசிரியர் தொழிலுக்கு வரும்படிச் செய்தாலன்றி நமது நாட்டில் கல்வி முன்னேற முடியாது. நமது ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கு ஈடான, இல்லையெனில் அவர்களை விட உயர்ந்த ஸ்தானத்தை ஆசிரியர்களுக்குத் தரவேண்டும். ஸிவில் உத்தியோகஸ்தர்களின்றி அரசாங்கம் நடக்க முடியாதென்றும், ஆசிரியர்கள் அனாவசியமான ஆடம்பர பொருள்களாகவும் நாட்டில் ஒரு கருத்து இருப்பது துரதிருஷ்டவசமாகும். கல்வி முறையில் முன்னேறுவதற்கு இம்மனோநிலையும், நோக்கும் மாற வேண்டும் என்று சாக்ளா சொல்கிறார்.

## 90 ஆசிரியர்களுக்கு விருதுகள்

புதுடில்லி, செப். 4—ஆசிரியர்களுக்கான இவ்வருட தேசிய விருதுகள் வழங்கப்படுவதற்கென நாடெங்கிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மொத்தம் 90 ஆசிரியர்களின் பெயர்களை மத்திய அரசாங்கம் இன்று அறிவித்திருக்கிறது. இவர்களில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 47 பேர்; செகண்டரிக் கல்வி ஆசிரியர்கள் 43 பேர். சமுதாயத்துக்கு ஆசிரியர்கள் ஆற்றியுள்ள சிறப்புமிக்க சேவைகளைப் பாராட்டும் வகையில் இந்தத் தேசீய விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

தமிழ் நாட்டில் இந்த விருதுகள் வழங்கப்படுவதற்கென மொத்தம் ஏழு ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வருமாறு:

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்:— திரு. எஸ். நீலகண்ட பிள்ளை, ஸிஸ்டர் அமலோர்ப்பவ மேரி, திரு. எஸ். கிருஷ்ணமாச்சாரி.

செகண்டரிக் கல்வி ஆசிரியர்கள்:-திருவாளர்கள் எம். ராஜா அய்யர், ஏ. என். லக்ஷ்மணராவ்; ஜே. பி. தேவசகாயம்; கே. ராஜரத்தினம்.

இவ்விருது பெறும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் நற்சான்றிதழொன்றும் 500 ரூபாய் ரொக்கமும் வழங்கப்படும்.

இத்திட்டம் 1958-59லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1964 – 65 வரை மொத்தம் 520 ஆசிரியர்கள் இந்த விருதுகளைப் பெற்றுள்ளனர். அவர்களில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 276 பேர்; செகண்டரிக் கல்வி ஆசிரியர்கள் 244 பேர்.

போர் நிறுத்தம் ஏற்பட்டது குறித்து அமெரிக்கா முழுவதும் ஆறுதல் அடைந்தது; இதை ஜனாதிபதி, செனட்டர்கள், பிரதிநிதி சபையினர், உயர் அதிகாரிகள் முதலியோர் வாஷிங்டனில் வெளியிட்ட அறிக்கைகள் எடுத்துக் காட்டும். நாட்டின் உணர்ச்சியை ஜனாதிபதி ஜான்ஸன் பின்வருமாறு வெளியிட்டார்:

"ஐ. நா. பாதுகாப்புச் சபையின் போர் நிறுத்தக் கோரிக்கைக்கு இணங்கிய பாகிஸ்தான், இந்தியா தலைவர்களின் அரசியல் மேதைத் தன்மையையும் நிதானத்தையும் நான் பாராட்டுவது அமெரிக்கர் அனைவர் சார்பாகவும் பாராட்டுவதாகும். ஆசியாவின் துணைக் கண்டத்தை அச்சுறுத்திய பயங்கர அபாயங்கள் இதனால் பெரிதும் விலகியுள்ளன.

"இச் சில வாரங்களில் அமைதியின் பொருட்டுத் தலைமைக் காரியதரிசி ஊதாண் நியாயமாகவும் உறுதியாகவும் செயலாற்றினமைக்கு அமெரிக்க மக்கள் சார்பாக நமது ஆழ்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"இந்த இரு நாடுகளும் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு இணங்க, தீராதிருக்கும் தங்கள் வேற்றுமைகளை அமைதியாகத் தீர்க்கும் வழியில் முன்னேறும் என நம்புகிறோம். ஐ. நா. வின் வேலை இப்பொழுது தான் தொடங்கியிருக்கிறது. அது இன்னும் நடக்க நடக்க நாம் நமது செயலாலும் சொல்லாலும் எப்போதும் அதற்கு முழு ஆதரவளித்து வருவோம்.",

## வாஷிங்டனில்

## ஐ. நா. பொதுச் சபையின் 20-வது ஆண்டுக் கூட்டம்

ஐ. நா. பொதுச் சபையின் 20-வது அடைந்தது; இதை ஜனாதிபதி, 21-ல் ஆரம்பமாயிற்று. இது ஐ. நா.வின் அதிகார பூர்வமான "சர்வதேச ஒத்துழைப்பு ஆண்டு."

காலஞ்சென்ற பிரதம மந்திரி நேரு 1961-ல் ஐ. நா.வில் பேசுகையில் தான், ஐ. நா. வின் 20-வது ஆண்டை சர்வதேச ஒத்துழைப்பு ஆண்டாகக் கொண்டாட வேண்டும் என்று முதன் முதல் யோசனை கூறினார். 1964 டிசம்பர் 31-ல் பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி நாட்டு மக்களுக்கு வானொலியில் பேசுகையில் கூறியது வருமாறு:

"அமைதி, நீதி, முன்னேற்றம் இவை பற்றி உலக மக்களுக்குள்ள நம்பிக்கைகளுக்கும் ஆவல்களுக்கும் சின்னமாக, உருவாக ஐ. நா. ஆகியுள்ளது என்பதற்கு ஐயமில்லை. ஐ. நா. சாசனத்தில் போற்றி வைத்துள்ள உயரிய கொள்கைகள் மனிதனின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக்குச் சான்றாகும். இந் நம்பிக்கை நிலை நின்று வலுப் பெற வேண்டுமானால், பசி, பிணி, அறியாமை

ஆகிய தொன்மையான நோய்களும் அணு ஆயுதப் போர் என்னும் புதிய கொடுமையும் உலகிலிருந்து ஒழிய அனைவரும் ஒன்றுபட்டு முயற்சி செய்தால் தான் முடியும்.

பருப்பொருள் உலகத்தைப் பற்றிய அறிவுக் குறைவினால் மனிதன் இயற்கையின் கடுமையான சக்திகளைச் சமாளிக்க வழியறியாது இருந்த காலம் ஒன்று உண்டு. இன்று இயற்கையின் மர்மங்களையும் மறைவான செல்வங்களையும் திறந்து காட்டியுள்ள இணையற்ற விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்தால், மனிதன் தன் நிலைமையை முன்னேற்றும் வழி கண்டு கொண்டான். அவனைத் தடுப்பவை, உலகத்தின் வளங்களை முழுவதும் பயன்படுத்தி நேர்மையாகப் பங்கிட்டுக் கொள்ள முடியாதபடி குறுக்கே நிற்கும் தன்னலமும் பேராசையும்; அரிய வளங்களை மாபெரும் போர்க் கருவிகளின் வீணான உற்பத்திக்குத் திருப்பி விடும் பரஸ்பர பயமும் தப்பெண்ணமும் ஆகும். வீண் மட்டுமல்ல, அணு ஆயுதங்களும் பெருவாரி அழிவு செய்யும் பிற வகைகளும் உள்ள இக் காலத்தில், கற்பனைக்கும் எட்டாத பயங்கர அபாயமும் ஆகும்.

ஏழை நாடுகளில் கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கை நிலைகளை உயர்த்துவதிலும் சரி, ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும் இனத்தவர்களுக்கும் சுதந்திரமும் சமத்துவமும் கிடைக்கச் செய்வதிலும் சரி, நமது அன்றாட வாழ்க்கையிலும் சரி, கண்கூடான ஒத்துழைப்புச் செயல்கள் மூலமாகத்தான் அமைதியை வலுவாக்கி, மனித குல நல்வாழ்வை உறுதியாக்க முடியும்."

---

## பொன்மொழி :

'இவையாவும் யான்,' 'இவையாவும் நீ,' 'நீ ஆண்டவன் : நான் நின் அடிமை இம் மூன்றில் ஏதேனும் ஒரு நிலையைப் பெற்றுப் பக்குவம் அடைந்த மனிதனால் கடவுளை அடைய முடியும்.

—சுவாமி விவேகானந்தா.

---

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Bradway, Madras-1.